
ISSN: 2012 - 6352

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி



மே – 2014

"உழைப்பு – அது
உன்னை உயர்த்தும்
உலகை உயிர்ப்பிக்கும்
இறைவன் உழைப்பில்
பிரபஞ்ச இயக்கத்தில் – உன்னைப்
பங்காளியாக்கும்"

40/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொனிடன்

**மே - 2014**

மலர் - 46 இதழ் - 04

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் - 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு .................. 01
தொழில் தொழிலாளர் .................. 02
தீர்க்கதரிசனங்களின் நிலம் ......... 04
தேசிய அன்பிய தினம் .................. 06
மாணவர் பக்கம் .............................. 08
அமரர் வணசிங்கா .......................... 10
திருத்தந்தையின் ஈஸ்ரர் ............. 12
வீட்டு மருத்துவம் .......................... 13
புதியதொரு மாற்றம் செய் ........... 14
இலக்கிய மஞ்சரி ............................ 15
விடலைத் தாபம் ............................. 16
மனித உரிமைகள் .......................... 17
எண்ணிப்பார்க்கையில் ................. 19
இஸ்ராயேல் ..................................... 20
வறட்டுக் கொளரவம் ..................... 22
புனிதர்களை அறிவோம் .............. 24
கடுகுக் கதை .................................. 25
ஜூபிலி நாயகியே வாழ்க ............. 26
விவிலியம் கற்போம் ...................... 27
அறிவை வளர்ப்போம் ................... 28



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...!

உழைப்பின் உண்மைப் பொருளை உணர்ந்தோர் உழைப்பே தெய்வம் என்கின்றனர். காந்தியடிகள் அழகாகக் கூறுகின்றார்:
"நாம் தொழுகை நடத்துகின்ற ஆலயம் மட்டுமல்ல,
நாம் உழைக்கும் இடமும் புனிதமானது" என்று.

மே மாதம் மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். அதேவேளை, இம்மாதம் முதலாம்நாள் உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். உழைப்பு தெய்வத்திற்கு ஈடாக, புனிதமாக விளங்குகின்றது என்றால் அது தெய்வத்தின் இயல்பு, குணம் என்று அழைப்பது தவறாகாது.

உழைப்பு ஒருவனை மனிதனாக, மாண்புள்ளவனாக, நேர்மையாளனாக உயர வழி வகுக்கின்றது. (2 தெச 3:10) பவுலடியார் அழகாக, "உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது" என்கிறார். உழைக்கும் எண்ணம் ஒருவனுக்கு அடிப்படையிலேயே உருவாக வேண்டும். உழைப்பு கடவுளால் தரப்பட்ட கொடை என்பதை உணர்ந்து அதை நல்ல முறையிலே நற்செயல்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

நாம், உழைப்பாளர்களின் தினத்தைக் கொண்டாடும் இம்மாதத்தில் இந்த உழைப்பாளர்களின் பாதுகாவலராக தாய்த்திருச்சபை புனித யோசேப்பை நினைவுகூருகின்றது.

இந்த விழாவானது புனித 12ம் பத்திநாதரால் 1755ம் வருடம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புனித யோசேப்பு, உழைப்பு இறைவனின் கொடை என்பதை உணர்ந்து இறைவனின் திருவுளத்தைப் பாங்குடன் நிறைவேற்றினார். தன்னுடைய பணி வாழ்விலே நேர்மையையும், முழு ஆர்வத்தையும் கடுமையான உழைப்பையும் காட்டி மற்ற எல்லாருக்கும் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றார். செய்கின்ற வேலையை மனிதருக்காக மட்டுமன்றி, கடவுளுக்காகவும் செய்து மனநிறைவு கொண்டார் புனித யோசேப்பு. நாமும் உழைக்க வேண்டும்; உழைத்தால்தான் வாழ்க்கையில் உயர்வைக் காணமுடியும்.

கவிஞர் வைரமுத்துவின் கூற்று இவ்வாறு அமைகிறது.
"ஜோசியத்தை நம்பினேன், பார்த்தவன் வாழ்ந்தான்.
லாட்டரியை நம்பினேன் விற்றவன் வாழ்ந்தான்.
உழைப்பை நம்பினேன் உண்மையாய் நான் வாழ்ந்தேன்"

விரலில் அழுக்குப் பிடிக்காமல் வியர்வை ஒரு துளியும் சிந்தாமல் வாழவேண்டும் என எண்ணும் சுகவாசிகள் பூமிக்கும் பாரம், சாமிக்கும் தூரம். எனவே, நாம் உழைக்க வேண்டும்; பிறர் உழைப்பில் வாழக்கூடாது.

இந்த உழைப்பாளர் தினம் மேல்மட்ட வர்க்கத்தின் விழா மட்டுமன்று, மாறாக கொத்தடிமைகள், சிறுவர் தொழிலாளர்கள், சலவைக்காரர்கள், சமையல் செய்வோர் போன்றவர்களையெல்லாம் நினைவுகூர்ந்து நன்றி நவிலும் நாள். மேலும் முதலாளிகளின் முரண்பாடுகளுக்குள் சிக்குண்டுள்ள கூலித் தொழிலாளர்கள் இவர்களின் உரிமைக்காய், விடுதலைக்காய் குரல்கொடுக்கும் நாள்.

மற்றவர்களுடைய பணம், பொருள், உடைமைகளை மட்டும் சுரண்டுவது பாவம் அல்ல, பிறருடைய உழைப்பைச் சுரண்டுவதும் மிகப் பெரிய பாவந்தான். தனிமனிதனுடைய சுயநலத்திற்காக பிறருடைய உழைப்பு சுரண்டப்படும் நிலை அடியோடு ஒழிய வேண்டும். புனித யோசேப்பின் குணநலன்களான நேர்மை, வாய்மை, பகிர்வு மனப்பான்மை, கடுமையான உழைப்பு போன்ற பண்புகள் எல்லாம் நம்முடையதாக்கப்பட வேண்டும். வேலையில்லாமல் திண்டாடும் ஒவ்வொருவருக்கும் கரம் கொடுத்து உதவ உறுதியெடுக்கும் நாளிது.

உழைப்பைப் போற்றுதல் உயர் பண்பு. அதை அடுத்தவர்க்கு அர்ப்பணித்தல் தியாகம். அதை விலை பேசுதல் சுயநலம். அதை மதிக்காதிருத்தல் அறிவீனம்.

"ஓடினால்தான் அது நதி
வீசினால்தான் அது காற்று
பாடினால்தான் அது குயில்
பாடுபட்டால்தான் அவன் மனிதன்"

உழைப்பைத் தந்த இறைவனுக்கு நன்றி கூறி அவர் ஆசீரைப் பெறுவோம்.

– அதிபர் –

**இறைவார்த்தை**

**"உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது"** (2 தெச 3:10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொழில்
## தொழிலாளர் – தொழில் கொள்வோர்
## கடமைகள் – பொறுப்புகள்



தொழில்துறை சமுதாயத்தின் புது வடிவங்களில் வளர்ச்சி கண்டுள்ளது. இதுபோல் இன்று மாற்றத்துக்கு உட்பட்டிருக்கும் பொருளாதாரத் துறையிலும் ஒவ்வொருவருக்கும் போதுமான வசதியான வேலையும் அந்தந்தத் தொழிலிலும், தொழில் நுணுக்கத் துறையிலும் தகுந்த பயிற்சிக்கான வாய்ப்பும் அளிப்பதற்குக் கவனமெடுக்க வேண்டும்.



பொருட்களை உற்பத்தி செய்வதிலும் பரிமாறுவதிலும் அல்லது பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றுவதிலும் செலுத்தப்படும் மனித உழைப்பு பொருளாதார வாழ்வின் மற்ற எல்லாக் கூறுகளையும் விடச் சிறந்தது. ஏனெனில், மற்றவை யாவும் வெறுங் கருவிகளே.



மக்கள் தேவையான அளவு வேலைவாய்ப்பு அடைய, தன் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவரை, தன்னால் இயன்றவரை உதவுவது சமூகத்தின் கடமையாகும். உழைப்பிற்கு அளிக்கப்படும் ஊதியமானது, மனிதன் தன்னுடையதும், அதனைச் சார்ந்தோருடையதுமான உலக, சமூக, பண்பாட்டு, ஆன்மீக வாழ்வைத் தகுந்த முறையில் நடத்தத் தேவையானவற்றை அளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதேவேளையில், அது ஒவ்வொருவருடைய அலுவல், உற்பத்தி செய்யும் திறன், வேலை செய்யும் இடத்தின் சூழ்நிலைகள், பொதுநலன் இவற்றையும் கவனத்தில் கொண்டு ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.

பொருளாதாரம் மனிதர்களின் ஒன்றித்த உழைப்பாலேயே பெரும்பாலும் உருவாகுவதால் அதை எந்த ஓர் உழைப்பாளிக்கும் கேடு விளைவிக்கும் வகையில் அமைப்பதும், செயல்படுத்துவதும் தவறு. அது மனிதத் தன்மையற்ற செயல். இருப்பினும் உழைப்பாளிகள் தங்கள் உழைப்பிற்கே ஒரு வகையில் அடிமைகளாக்கப்படுவது இன்றுகூட அடிக்கடி நாம் காணும் ஒரு நிகழ்ச்சி. பொருளாதாரச் சட்டங்கள் என்று அழைக்கப்படுபவை எந்த வகையிலும் இதனை நேர்மையானது என்று காட்டமுடியாது. எனவே, உற்பத்தி வேலை செய்யும் முறை முழுவதுமே மனிதனது தேவைகளுக்கும் அவனது வாழ்க்கை, சிறப்பாகக் குடும்ப வாழ்க்கை முறைக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும்.

பொருளாதார ஆக்க முயற்சிகளில் சுதந்திரமும் தன்னாட்சி உரிமையும் கொண்ட மனிதர்கள் ஒன்று சேருகிறார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனவே, முதலாளிகள், வேலையில் அமர்த்துவோர், வேலை நடத்துவோர், உழைப்பாளிகள் ஆகியோர் ஒவ்வொருவரின் அலுவலிலும் கவனம் செலுத்தி, தொழில் நிர்வாகத்திற்குத் தேவையான ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்காமல் தொழிலை நடத்துவதில் யாவரும் செயல்முறையில் பங்குகொள்வதை நன்கு தீர்மானிக்கப் பட்ட வழிமுறைகள் மூலம் முன்னேற்ற வேண்டும்.

தொழிலாளர்கள் பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளை நிர்ணயிப்பதில் தாங்களாகவோ, தாங்கள் சுதந்திரமாகத் தெரிந்தெடுத்த பிரதிநிதிகள் வழியாகவோ பங்குகொள்ள வேண்டும். ஏனெனில் தொழிலாளர்களுடையவும், அவர்கள் தம் மக்களுடையவும் வருங்கால வாழ்வு இவற்றையே சார்ந்துள்ளது. ஆனால், இத்தகைய சூழ்நிலைகளைப் பற்றிய தீர்மானங்கள் இந்த ஆக்க முயற்சிகளால் அல்ல, இதைவிட மேல் நிலையிலுள்ள சட்டங்களினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

சுதந்திரமாகத் தொழிலாளர் சங்கங்கள் அமைக்கும் உரிமை மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். இச்சங்கங்கள் தொழிலாளர்களின் நிலையை உண்மையாக எடுத்துக் காட்டக்கூடியனவாகவும் அவர்கள் பொருளாதார வாழ்வைச் சரியான முறையில் அமைக்கக்கூடியனவாகவும் இருக்கும். பழிவாங்கும் எண்ணமின்றி இச் சங்கங்களின் பணியில் சுதந்திரமாகப் பங்குகொள்ளவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

இருப்பினும், சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் எழும்போது அமைதியான ஒரு முடிவுக்கு வருவதற்கு முயலவேண்டும். இருதிறத்தாருக்கும் இடையே உண்மையான உரையாடலுக்கு முதன் முதலில் ஆவன செய்ய வேண்டும். என்றாலும், தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் நேர்மையான தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றவும் வேலை நிறுத்தம் செய்வது இன்றைய சூழ்நிலைகளில் கூட இறுதியானதாய் இருப்பினும் தேவையான ஒரு வழிவகையாக இருக்கலாம். ஆனால், எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் சமாதான உடன்பாட்டையும் உரையாடலையும் மீண்டும் கொணர வழிசெய்ய வேண்டும்.

இன்றைய உலகில் திருச்சபை
- இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் -



# ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஆறாவது ஆண்டு நிறைவு

இம்மாதம் (மே) இருபத்திநான்காம் திகதி நமது மறைமாவட்ட
ஆயர் பேரருள் தந்தை **யோசப் பொன்னையா**
ஆண்டகை அவர்கள்
ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஆறாவது ஆண்டு
நிறைவாகும்.
அன்னாரது பணி மேலும் சிறந்திடவும், நலன்கள் பல பெற்றிடவும்
இறை அருளும் ஆசீரும் நிறைந்திட வேண்டுமென
வாழ்த்துகிறோம், வேண்டுகிறோம்.

- தொண்டன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீர்க்கதரிசனங்களின் நிலம் 04

## பயணக்கட்டுரை

இன்றைய யூதர்களும் பலஸ்தீனர்களும் வாழ்வோடு எத்துணை போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது, அதனைக் கண்டவர்களுக்கே புரியும். யூதர்கள் தங்கள் உழைப்பினால் எங்கும் பச்சையை விதைத்து வைக்க, பலஸ்தீனர்களோ ஆங்காங்கு மலைகளில் மந்தை மேய்த்துக்கொண்டிருந்தார்கள்.
அதனையும் தாண்டினால் நமது நெல் வயல்களைப்போல் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கோதுமை வயல்கள்தான். இவையெல்லாம் எவ்வாறு இவர்களுக்கு மட்டும் சாத்தியமாகிறது? இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தாங்களென்கின்ற இறுமாப்புதான் இதையெல்லாம் இவர்களைச் செய்விக்கிறதோ என்னவோ. அரிசியையும், மாட்டு இறைச்சியையும் தவிர அனைத்தும் அங்குக் கிடைக்கும்.

நகரமென்று நாங்கள் முதலில் தரிசித்தது, பலஸ்தீன அதிகார சபைக்குள் அடங்கும். (பெயருக்குதான் பலஸ்தீன அதிகார சபையே தவிர, அதிகார மெல்லாம் இஸ்ரேலிடம்தான்) கலிலேயாவின் திபேரியஸ் நகரம். இயேசு அதிகம் வாழ்ந்து பணி செய்த 'கப்பர் நாகும்' என்கிற ஊர் இருந்த அடையாளமேயின்றி வெறும் கற்குவியல்கள்தான் எஞ்சியிருக்கின்றன. அவர் வளர்ந்த 'நாசரத்', உருமாற்றம் நிகழ்ந்த 'தபோர் மலை', அவரது மிகப் பிரசித்தமான மலைப் பிரசங்கம் நிகழ்ந்த பகுதிகள், ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்தளித்த கடலோரம் என அனைத்துமே அப்பிராந்தியத்தையொட்டி அமைந்தவையே!

மலைப் பிரசங்கத்தின் எட்டுப் பேறுகளையும் நினைவுறுத்தும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட எண்கோண ஆலயம் மிகப்பிரசித்தம். இதனருகிலுள்ள 'சப்கா' *(TSUBKA)* என்கிற இடத்தில்தான் உரோமர்களுக்குப் பின் அங்கு


பாலஸ்தீன்

அ.ச. பாய்வா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வந்த 'பைசாந்தியர்கள்' (கிறிஸ்தவர்கள்) *(BISENTINES)* 1600களில் நிருமாணித்த பிரபலமான 'மீனும் கூடையும்' எனும் 'மொசைக்' சித்திரம் காணப்படுகிறது. நானூறு வருடங்கள் கடந்தும் அந்த மொசைக் சித்திரம் அன்று கண்ட மேனிபோல் அழகோடிருப்பது வியப்பு.

இயேசு புயலை அடக்கிய, அநேக தடவைகளில் படகிலிருந்தவாறே போதனைகள் செய்த அந்தக் கலிலேயாக் கடலில் பயணஞ் செய்தபோதுதான் திபேரியஸ் நகரின் முழு அழகையும் தரிசித்தேன். எங்குமே தீப்பெட்டிகளை அடுக்கியடுக்கி வைத்தாற் போல் மாடி வீடுகள். இன்னும் கொஞ்சம் தூரத்திலிருந்து பார்த்தபோது 'டிஸ்கவரி' அலைவரிசையில் வரும் குளவிக் கூடுகள் போல் அவைகள். கரடு முரடான நிலத்தில் பதித்திருந்த அதிசயங்கள் வியக்கத்தக்கவை.



கலிலேயாக் கடல் உண்மையில் நமது கடல்களைப்போல் உப்புக் கடலல்ல. அது மலைகள் சூழ்ந்த மிகப் பரந்த ஒரு நன்னீர் ஏரி. இஸ்ரேலின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதும் இதுதான். இந்தக் கடலில் வளரும் 'பேதுரு மீன்' *(PETER'S FISH)* இன்னொரு முக்கியம். எங்களுக்கான அன்றைய மதிய உணவே அந்தப் பேதுரு மீன்தான். இயேசுவின் காலங்களில் மீன்களை நெருப்பில் சுட்டுச் சாப்பிட்டதை நினைவுகூரும் விதத்தில், அந்தப் பெரிய பேதுரு மீன்கள் நவீன முறைப்படி *GRILL* செய்யப்பட்டுப் பரிமாறப்பட்டன. ஒரு முழு மீனையாவது கையால் தொடாது கரண்டிகளால் ஆய்ந்து நமது ரசனைக்கேற்ப



பேதுரு மீன்

சோஸ், உப்பு, மிளகு என எதையாவது கலந்து சாப்பிடலாம்.

எங்களோடு வந்த பலர், முட்கரண்டி சகிதம் சுட்ட மீனுடன் புரிந்த போர் மறக்க முடியாதது. அவர்கள் முட்கரண்டியாலும் கத்தியாலும் மீனை ஆய முற்பட்ட ஒவ்வொரு தடவையும், முட்கரண்டியும் கத்தியும் பீங்கானில் பட்டெழுந்த சப்தம் அந்தப் பிராந்தியம் முழுவதும் எதிரொலித்தது. ஆனால், நம்மவர் வெட்கத்தை விட்டுப் பய பக்தியோடு பேதுரு மீனை ருசித்துச் சாப்பிட்டார்களென்பதே பெரிய விடயந்தான்.

பேதுரு மீன் வேறொன்றுமல்ல. நமது ஆற்றில் பிடிபடும் 'யப்பான் மீனின்' பெரிய உருவந்தான். அகலத்திலும் அது பெரியதாயிருந்தது. இயேசுவும் அவரது சீடர்களும் உண்ட அதே மீனை நாங்களும் சுவைத்தது மறக்க முடியாத அனுபவந்தான்.

இதன்பின்னர் நான் கண்டதுதான் பலஸ்தீனப் பிரச்சினையின் மையப்புள்ளியான 'யெருசலேம்' நகரம். அதற்கு முன் யெருசலேமைச் சூழ நடந்தவைகளைப் புரிந்துகொண்டு அதனுள் பிரவேசிப்பதுவே பொருத்தமென எண்ணுகிறேன்.

அது யெருசலேமா? இல்லை, எரிசலேமா...?

- தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய அன்பிய தினம் - 2014 மே 04

ஜே. பத்திநாதன்

இம்மாதம் நான்காம் நாள் சிறு கிறிஸ்தவ குடும்பங்களின் தினமாக, அன்பியத் தினமாக தேசிய 'அசிப்பா' குழுவினரால் சிறப்பிக் கப்படுவதால் அன்பியம் பற்றிச் சிந்திப்பது பொருத்த மாக இருக்கும்.

**அன்பியம் அல்லது சிறு கிறிஸ்தவக் குழுக்கள் என்றால் என்ன? ஏன் நாம் அவற்றில் பங்கு பற்ற வேண்டும்? என சிந்திப்பதும் பொருத்தமாக இருக்கலாம்....**



அன்பு வாழும் இடம் அன்பியம் என அழைக்கப் படுகிறது. அடுத்தவனை, அயலவனை அதிகமதிக மாய் அன்பு செய்ய, அவ னைப் புரிந்து கொள்வது, அவனை அறிந்து கொள்வது அவசியமா கிறது. அருகருகே வாழ்ப வர்களை அறிந்துகொண்டால் - தெரிந்துகொள்ள முற்பட்டால் அவர்களை அன்பு செய்யவும், ஆதரவாக இருக்கவும் முடியும். ஆண்டவன் சாயலாக எம் அருகே வாழ்வோரை, தேவையில் உழல்வோரை - எம் கண்களுக்குப் புலப்படுவோரை அன்பு செய்யாமல் கண்களுக் குத் தெரியாத கடவுளை நாம் அன்பு செய்கிறோம் எனக் கூறுவது எவ்வகையில் உண்மையாக இருக்கமுடியும்...?

இயேசு ஆண்டவரின் பணிக்காலத்தில் அவரது சோதனைக் களம் ஆலயமாக மாத்திரம் இருக்கவில்லை. ஆலயத்திலும் அவர் போதிக்கா மல் இருந்தவரல்ல. அதேநேரம் வயல் வெளிகள், கடற்கரைகள், பாலை நிலங்கள், படகுத் துறை கள், கிணற்றடி, சில தனிப்பட்டவர்களது இல்லங் கள் போன்றவற்றிலும் அவர் இறையாட்சி பற்றிய தமது போதனைகளை முன்னெடுத்தார். கூடவே, பாமர மக்கள் மீது பரிவும் கொண்டார். இந்த அடிப்படையிலேயே அன்பியம் அல்லது சிறு கிறீஸ்தவ குழுமத்தினரும் அருகருகே வாழும் பத்துப் பதினைந்து குடும்பங்கள் தாங்கள் தாங்கள் வாழும் சூழலில் உள்ள இல்லங் களில் வாராந்தம் கூடி, உயிர்த்த இயேசுவின் பிரசன்னத் திற்காகச் செபித்து, இறைவார்த் தையை முன் னிலைப்படுத்தி, தங்களுக்குள் உயர்வு, தாழ்வு இல்லை என்பதைக் குறிக்க வட்ட வடி வில் அமர்ந்து இறைவனது ஒளியில் இறை வார்த்தையின் ஒரு பகுதியைப் படித்து அவ் இறை வார்த்தைகள் ஊடாக இறைவன் வழங்கும் செய்தி என்ன என்று பகிர்ந்து, அவ் இறைவார்த்தையை தற்போது நாம் வாழும் சூழலில் எவ்வாறு தமது வாழ்வாக்குவது எனத் தீர்மானித்து, அதனை வாழ்வாக்க முயற்சி செய்வ தாகும். மேலும், ஒருவர் அடுத்தவர் தேவையில் உதவிக் கரம் நீட்டி ஒருவர் மற்றவரை மதித்து மரியாதை செய்து, அன்பு வாழ்வு வாழ்ந்து வருவது ஆரம்பகாலத் திருச்சபையில் காணப்பட்டது போன்று, திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறை வேண்டலிலும் உறுதி யாய் நிலைத்திருந்த ஆதித் திருச்சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்க்கை முறையை எமக்கு எடுத்துக் காட்டும் ஒரு வழிமுறையாகத் தென்படவில்லையா? திருத் தூதர் பணி 2:42 ஐ படித்துப் பாருங்கள்.

ஆண்டவனை - எல்லாம் வல்லவனை - எம்மைப் படைத்தவனை அன்புசெய்ய - போற்றிப் புகழ, இறைவார்த்தை, திருவருட்சாத னங்கள், திருப்பலி, அருங்கொடை இயக்க எழுச்சி வழிபாடுகள் எமக்கு உதவக்கூடும். அடுத்து இருப் பவனை மதித்து வாழ - அன்புசெய்து பரிவு கொள்ள - அரவணைத்து, ஆதரவளித்து வாழ - தேவையில் வாடுவோருக்கு உதவ - எங்களைக் கவனிப்பார் யாரும் இல்லை என்ற ஏக்கக் குரல் களைக் குறைக்க அன்பிய வாழ்க்கை முறையால்



மாத்திரமே இயலும் என்றுணர்ந்த திருச்சபையால் காலத்தின் கட்டாய தேவை என்று உருவாக்கப் பட்டதே அன்பியம் அல்லது சிறு கிறீஸ்தவ குழுக் களாகும். உங்கள் பகுதியில் அன்பியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அதில் இணைந்து அன்பு வாழ்வு வாழ்ந்து பங்கேற்கும் திருச்சமூகமாக மாற திட சங்கற்பம் பூண்டிடுங்கள். ■



## ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட

## 31 ஆண்டுகள் நிறைவில்

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருள் தந்தை
**யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள்**
இம்மாதம் 07ம் திகதி ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு
31 ஆண்டுகளை நிறைவு செய்கிறார்.

அன்னாருக்கு எமது நெஞ்சார்ந்த வாழ்துகளைத்
தெரிவித்துக் கொள்ளுகிறோம். கடந்த காலங்களில் அவர்
வழியாக கிழக்கு மாகாணத்துக்கு இறைவன் புரிந்த
நன்மைகள் பலவற்றுக்கும் நன்றி கூறுவதோடு,
ஆயரவர்கள் நலனும் திடனும் பெற்று மேலும்
பல்லாண்டு பணிபுரிய
இறை ஆசீர் வேண்டுகிறோம்.

- தொண்டன் -

**கொமுத்தும் வெயில் கொல்கிறதாம் உடலை**
**கொடியவரின் கடுஞ்சொற்கள் போன்றே** குறும்(புப்)பா – 130
**கழுத்துவரை ஆசைகொண்ட ஆடம்பர வாழ்க்கைமுறை**
**காட்டும்பயன் இதுவெண்பா றறிவர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




■ நில்மினி கஜேந்திரன்

இந்தியாவின் வடகிழக்கு பிரதேசமாகிய அசாம், மெகாலயா, மிசோறாம், திரிபுரம், அருணாச்சல பிரதேசம் மற்றும் மணிப்பூர் போன்ற பிரதேசங்களிலும் பரவலானது. இப்பகுதியில் வாழும் பெரும் பகுதி மக்கள் இச் சபையைச் சார்ந்தவராவர். பின்னர் இச்சபையானது வட, தென் இந்தியத் திருச்சபையுடன் இணைந்துகொண்டது.

## வட இந்தியத் திருச்சபை:

இது வட இந்தியாவில் பணியாற்றும் முக்கியமான புரட்டஸ்தாந்து சீர்திருத்தச் சபைகள் ஒன்றிணைந்து உருவாக்கிய சபையாகும். இயேசுவின் கூற்றுப்படி அவருடைய சீடர்களுள் நிலவும் ஒற்றுமையே அவர்களின் நற்செய்திப் பணியின் சிறப்பம்சமாகும். தமக்குள் ஒற்றுமை இல்லாமல் பிளவுபட்ட திருச்சபையாகப் பணிபுரிவது தமது பணிக்கு இடையூறாக இருப்பதை உணர்ந்த புரட்டஸ்தாந்து சபையினர் ஒன்று சேரத் தீர்மானித்தனர். இதற்கமைய அங்கு பணிபுரிந்த அங்கிலிக்கன், பப்ரிஸ்ற், பிறெஸ்பிற்றேரியன் கிறிஸ்துவின் சீடர்கள், பிரிட்டிஸ் மெதடிஸ்த, வட இந்திய திருச்சபையை உருவாக்கினர். இதனால், இன்று 1.5 மில்லியன் உறுப்பினர்களும், 1200 மறைபரப்பாளர்களும், 3000 பங்குகளும், 26 மறைமாவட்டங்களும் இருக்கின்றன.

## பிறெஸ்பிற்றேரியன் திருச்சபை:

இச்சபையானது 1707ல் ஸ்கொட்லாந்தில் ஆரம்பமானது. இது பொதுவாக கல்வினின் இறையியல் கொள்கையை பின்பற்றுகிறது. இவர்கள் கடவுளே அனைத்துலக ஆண்டவரென்றும் விவிலியமே நம் விசுவாசத்தின் ஒரே அதிகாரமென்றும், விசுவாசத்தினால் மட்டுமே மீட்பு என்றும் நம்புபவர்கள். 1894ல் பிரித்தானியாவில் வேல்ஸ் நகரத்திலிருந்து வந்த மறைபரப்பாளர்கள் வண. தோமஸ், ஜோன்ஸ் மற்றும் இவரது மனைவியால் திருச்சபை இந்தியாவிலே மெகாலயா பிரதேசத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இச்சபை 22.06.1914ல் தனது பணியை ஆரம்பித்தது. இத்திருச்சபையானது

## தென் இந்தியத் திருச்சபை:

தென் இந்தியத் திருச்சபையானது தென்னிந்தியாவில் நான்கு மாநிலங்களிலும் பணி புரிகின்ற புரட்டஸ்தாந்து சீர்திருத்த திருச்சபைகள் இணைந்து அமைத்த ஒரு சபையாகும். மக்கள் மத்தியில் பணியாற்றும் மறைபரப்பாளர் மத்தியில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் இருக்கவேண்டும் எனும் எண்ணக் கருவிலே உருவாகியது. இதன் முதற்கட்டமாக 24.07.1908ல் பிறஸ்பிற்றேரியர் மற்றும் பப்ரிஸ்ற் சபைகள் இணைந்து தென் இந்திய ஐக்கிய சபையை உருவாக்கின. பின்னர் 2ம் கட்டமாக முதலாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து ஒற்றுமை அமைப்பு அரும்பத் தொடங்கியது. இதன்மூலம் பல்வேறு இறையியல் சிக்கல்கள் தலைதூக்கின. ஆயர்வழி வந்த திருச்சபை, அப்போஸ்தலிக்க பாரம்பரியம் இன்னும் பல இருப்பினும், 1946ல் தென் இந்திய திருச்சபை, மெதடிஸ்த, அங்கிலிக்கன் சபையுடன் இணைய விரும்பியது. இதுவே தென் இந்தியத் திருச்சபை உருவாகக் காரணமானது. 27.09.1947ல் இது சென்னையில் இடம்பெற்றது. 14 மறைமாவட்டங்களுடன் ஆரம்பமான இச்சபையானது இன்று 21 மறைமாவட்டங்களாகி, 3.8 மில்லியன் உறுப்பினர்களையும், 124 மறைபணியாளரையும் கொண்டு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இரட்சணிய சேனை:

வண. வில்லியம் பூத் என்பவரால் 1878ல் இங்கிலாந்தில் ஆரம்பித்த இச்சபையானது, 19.09.1982ல் பிறெட்ரிக்குக்கர் என்பவரால் இந்தியாவில் மும்பை நகரில் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களின் பணியானது, எங்கெல்லாம் யாரும் பணியில் ஈடுபடவில்லையோ, அங்கெல்லாம் தமது பணியை எடுத்துச்சென்று பரப்புவதாகும். தமது விருதுவாக்கிற்கு அமைய, மக்களின் துயர் துடைக்கும் பணியில் இன்று முழு இந்தியாவிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களை மக்களின் உணவு, உடை, பெயர், பழக்கவழக்கத்திற்கமைவாக மாற்றி அமைத்தனர். இவர்கள் மறைபரப்பு மட்டுமல்லாது பஞ்சகாலத்திலும் இயற்கை அனர்த்தங்களிலும், சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர். சிறுவர்களின் கல்வியிலும், இளைஞர்களுக்குக் கைத்தொழில் பயிற்சி அளிப்பதிலும் ஈடுபடுவதோடு மருத்துவ சேவையினையும் வழங்கி வருகின்றனர்.

## பெந்தகோஸ்தே திருச்சபைகள்:

இச்சபை கத்தோலிக்க திருச்சபையின் அமைப்பு முறைக்கு எதிராகவும், சடங்கு முறைக்கு எதிராகவும் செயற்படும் நோக்குடனே அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பின்னர் பெரும்பாலான பெந்தகோஸ்தே மற்றும் அருங்கொடை திருச்சபைகள் மேற்குலக நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வருகை தந்தன. இவர்கள் தூய ஆவியின் வரங்களுக்கும், மீண்டும் புதிதாய்ப் பிறக்கும் அனுபவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். எவ்வித கட்டுப்பாடுமின்றி தாம் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவதாகக் கூறி தம் மனம்போன போக்கில் செயற்படுபவராவர். இன்றைய கணிப்பின் படி 400 மில்லியனுக்கும் மேலானோர் உலகம் பூராவும் உள்ளனர். இவர்களை நாம் இரு பெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கலாம்.

I. மரபுவழிவந்த திருச்சபையிலிருந்து விலகி புதிதாக ஒரு சபையை உருவாக்குபவர்கள்.


II. மரபுவழி வரும் திருச்சபைக்குள் இருந்து கொண்டு பெந்தகோஸ்தே சபையினரின் கூறுகளை தங்கள் வழிபாட்டிலும் ஆன்மீகத்திலும் பயன்படுத்துபவர்கள்.

1960ல் இத்தகைய சபைகள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. இவர்களின் முக்கியப் பண்புகளாய் கிறிஸ்து அனுபவம், விவிலியத்தின் முக்கியத்துவம், தூய ஆவிக்குள் திருமுழுக்கு என்பன காணப்பட்டன. மேற்கூறப்பட்ட அனைத்து பிரிவினைச் சபைகளும் வளர்ச்சி கண்டதை அவதானிக்க முடிகிறது.

### துறவிகள் ஆண்டு:

**1 நவம்பர் 2014 – 21 நவம்பர் 2015**

2014ம் ஆண்டு நவம்பர் 21ம் தேதி முதல் 2015ம் ஆண்டு நவம்பர் 21ம் தேதி வரை கத்தோலிக்கத் திருஅவையில் அனைத்துலகத் துறவிகள் ஆண்டு கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தழுவிபமைத்துத் துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத் தீர்வுத் தொகுப்பு வெளியிடப்பட்டதன் 50ம் ஆண்டை முன்னிட்டு 2015ம் ஆண்டு, அனைத்துலகத் துறவிகள் ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது.






***புலிவேட்டை முடிந்ததென முழக்கம்***
***பூமியெங்கும் செய்தவர்கள் மீண்டும்***
***புலிச்சேட்டை யாடுவது யார்முகத்தைக் கிழிக்கமனம்***
***புண்பட்டுக் கிடப்போர்க்கே கிலி!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமரர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா

## அவர்களது மறைவின் 25வது ஆண்டு நிறைவு நிகழ்வின் நிழல்கள்.....





**இலங்கைத் தமிழாசிரியர் சங்க முன்னாள் தலைவரும், தொழிற் சங்கவாதியும், சமூகப் பணியாளரு மான அமரர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா அவர்களின் 25வது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி, கடந்த ஏப்ரல் 5ம், 6ம் நாட்களில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. கடந்த 5ம் திகதி மாலை மட்/புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற நினைவுத் திருப்பலியில் இடம்பெற்ற அழகிய முன்னுரையை கீழே தருகிறோம். இதனை திரு. ஆனந்தா A.G. இராஜேந்திரம் அவர்கள் வழங்கியிருந்தார்.**

இன்றைய தினம் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னம் நாம் இழந்து போன ஓர் அன்புக்குரிய பொக்கிஷத்தையிட்டு எண்ணிப் பார்க்கவும், அந்த உத்தம உள்ளத்திற்காக இறைவனுக்கு நன்றி சொல்லவும் இங்கு கூடியிருக்கின்றோம்.

ஒரு நல்ல மைந்தனாக, அன்புக்குரிய கணவனாக, பாசத்திற்குரிய தந்தையாக, உற்ற நண்பனாக, வழிகாட்டும் தலைவனாக, நல்லாசானாக, பெரும் உழைப்பாளியாக, கடவுளுக்குப் பயந்து நடந்த ஓர் அருமையான மனிதனை – மனிதம் காக்க உழைத்த பெருமகனை – நாம் 25 ஆண்டுகளின் முன்னம் இழந்தோம்.

தனக்கென ஒரு பாதையை அமைத்துக்கொண்டு, அதிலி ருந்தும் இம்மியும் பிசகாமல் மற்றவர்களுக்காக வாழ்ந்து நிற்பது என்பது மிகவும் சிரமமானது. ஆனாலும், மனிதனை உயர்த்தி வைப்பதும் அதுதான் என்கின்ற நியதிக்கு அவர் ஓர் அசையாத சாட்சி! உண்மைக்கு என்றுமே துணை நின்றவர். அவர் எதற்காகவும் தனது கொள்கைகளை விட்டுத் தராத நெஞ்சுரம் கொண்டவர். நன்மை தரவல்ல குறுக்கு வழிகள் குறுக்கே வந்தாலும் கண்டுகொள்ளாமல் தாண்டிச் செல்லுகின்ற உறுதியான மனங்கொண்டவர். மக்களில் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு வாழ்ந்தவர்.

தம்மை நேசித்தவர்களுக்கும், தாம் நேசித்தவர்களுக்கும் மட்டும் அவர் வாழ்ந்து நிற்கவில்லை. தாம் அறியாத–முகம் தெரியாத எத்தனையோ பேருக்காகவும் – அவர்தம் வாழ்வு உயர்வதற்காகவும் – உழைத்து நின்றவர் அவர். அதிலும் மேலாக, அவரது கொள்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் எதிரானவர்களைக் கூட அரவணைத்துச் செல்லுகின்ற பண்பு அவரை, அவரது உயரத்திலும் பன்மடங்கு உயர்ந்தவராக இந்த மண்ணில் பெயர்பெறச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





தன் குடும்பத்தாருடன்

வாழ்பவருக்கு அவர் வாழ்வு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. துன்புறும் மக்களோடு தம்மை இனங் கண்டு அவர்களுக்காகக் குரல் கொடுக்கவும், சமயத்தில் உயிர் கொடுக்கவும் தயங்காத நெஞ்சமாக அவர் இருந்தார். தான் தெரிந்தெடுத்த இறைவழியில் கடைசிவரை வாழ்ந்துநின்ற அவருக்காக நாம் இன்றைய தினம் இறைவனுக்கு நன்றி சொல்வது சகல வழிகளிலும் பொருத்தமானது.

தன் குடும்பத்திற்காகவும், தன் இனத்திற்காகவும், தன் மண்ணிற் காகவும் அவற்றின் எதிர்காலம் குறித்த சிந்தனைகளோடும் வாழ்ந்து நின்ற அவரை இழந்தது அவர் குடும்பம் மட்டுமல்ல, அவரை நேசித்தவர்கள் மட்டுல்ல, அவரை மரியாதை செய்த உணர்வாளர்கள் மட்டுமல்ல இந்த மண்ணும், தமிழ் இனமும்தான் அவரை இழந்தது.

ஆண்டுகள் இருபத்தைந்துக்கு முன்னம் இது போன்ற நாளில் முகந்தெரியா கருக்கலில் அவரை வன்முறைக்குப் பலி கொடுத்தோம். எம் வன்மன வக்கிரங்களால் அவரைத் தொலைத்தோம்.

அவரை அழித்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுவதை அவரே ஏற்றுக் கொள்ளமாட்டார். அந்தச் செயல்களுக்கான பரிகாரத்தை வல்லதேவன் தனது நீதித் தீர்ப்பில் வழங்குவார் என்பது திண்ணம். நம்மைப் பொறுத்தவரையிலும் வணசிங்கா மாஸ்டர் நமக்கு இறைவன் தந்த ஓர் அரும்பெரும் சொத்து. அந்த நன்மைத்தனத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறி, இதுகாறும் அவர் தம் ஆன்மாவைத் தன் செட்டையின் கீழ் அரவணைத்து இளைப்பாறுதல் ஈந்த இறைவன், என்றுமே தம் நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனாக வாழ்ந்து தம் உயிரை மக்களுக்காகத் தந்துநின்ற அவரது அடியவனை மென்மேலும் தம் நிழலில் இளைப்பாற்றி காணச் செய்யவேண்டும் என்று தொடரவுள்ள திருப்பலியில் செபிப்போம். இன்றும் அவரது நினைவை நெஞ்சில் சுமந்து, கண்களை ஈரமாக்கிக் கொண்டிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் நண்பர்களுக்காகவும், அவர்கள் தேடும் ஆறுதல் அவர்களுக்குக் கிட்டவும் நமது வேண்டுதல்களையும் இறைவனிடம் ஏறெடுப்போம்.

---



இல்வாழ்வின் பெரும்பாகம் தன்னை ஈந்து
ஆசிரிய தொழிற்சங்க நெறியில் நின்று
நல்லபணி, தூயபணி, துணிந்து ஆற்றி
அரசியலில் கலவாத சங்கம் வைத்து
இலங்கை யெங்கும் அணிதிரட்டி இனப்பற்றோடு
நலிவுகண்டு, போராடி வெற்றியீட்டி
இலங்கியதோர் சிங்கமதை இழந்தோம் எங்கள்
இன உணர்வின் முதுசொத்தை நினைவு கூர்வோம்.

**— இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்**
**மட்டக்களப்பு வடக்குக் கிளை —**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்களே!

## புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு பழைய மாணவர் சங்கம் உங்களை அழைக்கிறது.

புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்களாகிய உங்களைத் தன்னுடன் ஓர் அங்கத்தவனாக இணைத்துக்கொள்ள புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு பழைய மாணவர் சங்கம் விழைகின்றது. தற்கால சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்து, எமது கத்தோலிக்க நிறுவனங்களையும், கல்விக் கூடங்களையும் பாதுகாத்துக்கொள்ள உங்கள் ஆதரவு அவசியமானது.

அதன் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் உங்கள் பங்களிப்பு என்றும் இருப்பதை உறுதி செய்யுங்கள். 140 வருடங்களுக்கும் மேலான கால வரலாறு கொண்ட எமது கல்லூரி தொடர்ந்தும் தனது புகழை மங்காது காக்க பங்காளர்களாக மாறி ஒத்துழைப்புத் தாருங்கள். உங்களைக் கல்வி அறிவூட்டி வளர்த்துவிட்ட தாயாம் புனித மிக்கேல் கல்லூரியை உயர்வடையச் செய்வது உங்கள் கைகளில்தான் தங்கியிருக்கிறது என்பதை மறக்க வேண்டாம்.

ஆயுட்கால உறுப்பினராக இணைந்துகொள்ள ரூபா. 1000.00 செலுத்தினால் போதுமானது. அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளப் புகைப் படத்துடன் ரூபா. 100.00 செலுத்த வேண்டும். அவ்வளவுதான்.

புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு பழைய மாணவர் சங்கத்தில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஐ.து. சில்வெஸ்டர் - 0773534160 / 065 3658154
A.A.G. இராஜேந்திரம் – 0771323577 / 065 2224677
E. பிரபு – 0771179501 / 0712307588

**வண. பிதா. டோமினிக் சாமிநாதன்**
(தலைவர்)

# திருத்தந்தையின் ஈஸ்ரர் செய்தி



ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை அறிவிப்பதில் எனக்கு எத்துணை மகிழ்ச்சி! இச்செய்தியை நான் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அறிவிக்க ஆசைப்படுகின்றேன். குறிப்பாக வைத்தியசாலைகளுக்கும், சிறைக் கூடங்களுக்கும், எங்கெல்லாம் மக்கள் துன்பப்படுகின்றார்களோ அங்கெல்லாம் சென்று அறிவிக்க விரும்புகிறேன். இன்னும் விசேடமாக இறைவன் தனது நற்செய்தியை விதைக்க விரும்புகின்ற ஒவ்வோர் இதயத்திற்கும் இந்த இயேசுவின் உயிர்ப்புச் செய்தியை நான் கொடுக்க வேண்டும்.

நான் சொல்ல விரும்புவது இதுதான்: இயேசு உயிர்த்துவிட்டார்! உனது வாழ்வுக்கு நம்பிக்கை உண்டு! நீ இனிமேலும் பாவத்தின் சக்திக்கு உட்பட்டவர் அல்ல! அன்பு வெற்றியடைந்துவிட்டது! இரக்கம் மேலோங்கிவிட்டது! இறைவனின் கிருபைக்கு மேலானது எதுவுமில்லை. இதனைத்தான் நான் அறிவிக்க வேண்டும்.

இறைவனின் அன்பு, தீமையையும் மரணத்தையும் முறியடிக்கும் வல்லமையுள்ள அன்பு. எங்கள் வாழ்வின் தீமை நிறைந்த இடங்களையும், வெறுமையான பகுதிகளையும் தனது அன்பினால் நிரப்பி எம்மை விடுவிக்க வல்லவர்தான் உயிர்த்தெழுந்த கிறிஸ்து. இதுதான் ஈஸ்ரர் தரும் மகிழ்ச்சி. பாவ அடிமைத் தனத்திலிருந்தும் தீமையின் படியிலிருந்தும் எம்மை விடுவித்து நிறைவான அன்பினால் மிகுந்த நன்மைக்கு எம்மைக் கடத்திக் கொண்டுபோகும் பயணம் தான் ஈஸ்ரர்.

**உங்கள் அனைவருக்கும் ஈஸ்ரர் நல்வாழ்த்துகள்!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீட்டு மருத்துவம்



கோடை காலம் தொடங்கி விட்டது, வெயில் கொளுத்துகிறது, வாட்டுகின்ற தாகத்துக்குக் குளிர்பானங்களைத் தேடுவோர் பலர். வியாபாரக் கம்பனிகளும், விளம்பரங்களும் கண்ணைப் பறிக்கும் வகையில் விதவிதமாகக் குளிர்பான விளம்பரங்களைத் தருகின்றன. விளம்பர மாடல்களும், சினிமா நடிகர் நடிகைகளும் குளிர்பானங்களை எப்படி அருந்துவது என்று அழகு காட்டுகிறார்கள். அவைகளைக் குடிக்கச் சொல்லி வற்புறுத்துகிறார்கள்.

குளிர் பானங்கள் அருந்துவதால் வரும் கேடுகள் பற்றி அவ்வப்போது பத்திரிகைகளில் மருத்துவ அறிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன.



கொக்கக்கோலா உலகப் புகழ்பெற்ற குளிர்பானம். ஆனால், இது சில நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. இது பல்வேறு நோய்களுக்கு காலாயிருப்பதாகக் குற்றச்சாட்டுகளுண்டு. அண்மையில் 'தி சண்' என்ற பத்திரிகை இதுபோன்ற குளிர் பானங்கள் அருந்துவதால் வரும் கேடுகள் பற்றி விலாவாரியாகக் குறிப்பிட்டுள்ளது.

■ ஆனந்த சித்தன்

ஒரு போத்தல் கோலாவில் குறைந்தது 67 கரண்டி சீனி சேர்க்கப்படுவதால் மிக விரைவிலேயே நீரிழிவு நோய் தாக்கும் வாய்ப்பு உள்ளதாம். அத்துடன் புளிப்புச் சுவைதரும் பாஸ்பேட் உப்பு உண்டாக்கக்கூடிய சருமப் பாதிப்பு, எலும்புகளை அரிக்கும் ஆஸ்டியோபோரோசிஸ் சிக்கல், பெண்களின் மாதவிடாய் சுழற்சியை சிதைக்கும் சினைப்பை நீர்க்கட்டித் தொல்லை, கணையப் புற்று என நீள்கிறது. அத்துடன், இதுபோன்ற கோலா பானங்களை அருந்துவோருக்கு 61 விகிதம் இதய நோய் தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாம்.

குளிர் பானங்களின் ஆபத்துகளை அறிந்தவர்கள் அவைகளை விடுத்து, பழச்சாறே நல்லது என அருந்துவதால் குளிர்பான உற்பத்தி நிறுவனங்களும் அதற்கேற்ப சந்தைத் திட்டங்களை மாற்றிக் கொண்டு பழச்சாறுகளை விதவிதமாகப் பெயர்களை வைத்துச் சந்தைப்படுத்துகின்றன. இயற்கையான பழச்சாறு, அதே கலர், அதே மணம், அதே சுவை என்று அப்படியே பழத்தைச் சாறு பிழிந்து தருகிறோம் என்று இந்த நிறுவனங்கள் ஓயாமல் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தாலும் உண்மை தூரமானது.

பழத்தைக் கழுவி, சாறு பிழிந்து, பழத்தின் எண்ணெய்த் தன்மையை நீக்கி, விரைவில் கெட்டுப்போகாமல் இருக்க, ஆக்சிஜனை வெளியேற்றி பால் பதப்படுத்துவதுபோல் பதப்படுத்தி, கசப்பு நீக்கி, அமிலத் தன்மையைக் குறைத்து அல்லது கூட்டி, ஆடை படிவதை சீராக்கி, கொதிக்க வைத்து, பின்பு குளிர்வித்து திடப்படுத்துகிறார்கள். இப்படிப் பல்வேறு இயந்திரங்களில் பதப்படுத்தி எடுத்து பழச்சாற்றின் அடர்த்தியைப் பெறுகின்றனர். இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பழச்சாற்றுக் கட்டிகளை, உள்ளூர் குளிர்பான நிறுவனங்கள் வாங்கி நீர் கலந்து இயற்கைப் பானமென விற்பனை செய்கின்றனர். காலத்துக்குக் காலம் மாறுபடும் பழத்தின் அமிலத் தன்மையையும் இனிப்புச் சுவையையும், ஈடுகட்ட பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புதியதொரு மாற்றம் செய்!

சினேகத்தைக் கட்டியணைக்க
- கோபத்தைக் கொன்றுபோடு

உறவைத் தேடியோட
- பகையைத் துரத்திப்போடு

சமாதானம் அருகே வர
- சண்டையை அகற்றிவிடு

சந்தோசம் பெருகிவர
- சந்தேகத்தை அழித்துவிடு

சுறுசுறுப்பாய் வலியைத் தாங்கிட
- நோயைச் சுருட்டிப்போடு

மறுவாழ்வு உனக்குண்டென
- மரணத்திற்கும் தயாராயிரு

மாதாவை செபமாலையில் செபிக்க
- சோம்பலைத் தூரத் தள்ளு

சர்வேசுரன் துணைகொண்டு
- சாத்தானை வெற்றிகொள்

விடியல் அருகிலென்று
- கவலையைப் போக்கியெழு

புது அகவையுன் கையில்
- பழைய ஆண்டைப் புறந்தள்ளு



■ ரஜனி ஈஸ்வரன்

இவையெல்லாம் உடலுக்கும்
ஆரோக்கியத்துக்கும் நல்லதன்று.

இயற்கையான பழங்களை அப்படியே சாப்பிடுவது நல்லது. அதிலுள்ள கரையும் கரையாத நார் சத்துகளும், ஏனைய சத்துகளும் நிறைந்த பலனைக் கொடுக்கும். மோர், இளநீர் போன்ற பானங்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாதவை மட்டுமல்ல, பல நன்மைகளைத் தருபவை, நோய் எதிர்ப்பாற்றலைத் தருவதோடு இளமையை நீடிக்கச் செய்து நரம்பு மண்டலங்களைப் பலப்படுத்தும் அற்புத பானங்கள் இவை. ■

## திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரைகளிலிருந்து ....

■ மனத்தாழ்மை, கருணை, தாராள மனப் பான்மை ஆகிய நற்பண்புகளே கிறிஸ்தவ வாழ்வு முறையாகும். இயேசு செய்தது போல, இது சிலுவையின் பாதை வழியே பயணம் செய்கின்றது. இந்தப் பாதை மகிழ்ச் சிக்கு இட்டுச்செல்கின்றது.

■ திருஅவையின் தொடக்க காலங்களை விட இக்காலத்தில் அதிக கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கைக்காகக் கொலை செய்யப்படுகின்றனர். கிறிஸ்தவர்களின் பாதையில் எப்பொழுதும் சிலுவை இருக்கின்றது.

■ அதிகாரம், பணம் என்ற சிலை வழிபாட்டி லிருந்து விடுதலை பெற்றவர்களாக இறைவனுக்கு மட்டுமே தங்கள் இதயங் களை அர்ப்பணிக்கும் அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்காக தேவ அழைத்தல்களின் ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பறவைகளில் தந்திரமிக்க பறவை காகம் என்பர். அதுமட்டுமல்ல, காகத்திற்கு 'இலகுபதனன்' என்றுமொரு பெயரும் உண்டு. பெரியவர்கள், கையில் என்ன உணவுப் பண்டங்களை வைத்திருந்தாலும் காகம் கிட்டவே வராது, தூர நின்று பார்த்துக்கொண்டிருக்கும். ஆனால், சிறு பிள்ளைகள் கையில் உணவுப் பொருட்கள் எதையும் வைத்திருந்தால் 'சடாரென்று' பறந்து வந்து பறித்துக்கொண்டு சென்றுவிடும். இதனால் தான் 'இலகுபதனன்' என்று பெயர்.

அதேபோன்று காகத்திற்கு இன்னுமொரு பண்பும் உண்டு. அதாவது, உணவு கிடைத்தால் சத்தமாகக் 'கரைந்து' மற்றக் காகங்களையும் கூப்பிட்டுச் சாப்பிடும்; இது நாம் அறிந்தவொன்று. ஆனால் உணவு தொடர்பாக, இன்னுமொரு பண்பும் காகத்திற்கு உண்டு.

திருமூலர் அருளிய 'திருமந்திரம்' என்னும் நூலின் நூற்றியேழாம் பாடல் பின்வருமாறு சொல்கின்றது.

ஆர்க்கும் இருமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந்தொல்லை
உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம்
அறிமினே!

இப்பாடலின் பொருள் பின்வருமாறு அமையும், கேளீர், கேளலார், நாடு, மொழி, வறுமை, செல்வம், இளமை, முதுமை என்ற வேறுபாடின்றி பசித்தோருக்கு உணவளித்தல் ஈதல் உடையோரின் கடனாகும்.

உண்ணக்கூடியவாறு உள்ள காய், கனி, கிழங்கு, விதை, இலை, பூ என்பனவற்றை அவ்வாறும், ஏனையவற்றை சமைத்தும் உண்ண வேண்டும். பழமையாகி பழுதானவற்றை உண்ணல் ஆகாது. ஆனால் தமிழகத்தார் உண்ணும் பழஞ்சோறு, கறி என்பன இவ்வகையைச் சார்ந்தன வல்ல. அவை முறையே கருநீர், வடிகஞ்சி, வெந்நீர், சுக்கு முதலியன கூட்டிப் பதமாக்கி அடுப்பில் சூடேற்றி எடுப்பதால் அவையும் புது உணவே!

அதுமட்டுமல்ல, உணவைச் சற்றுத் தாமதமாய்ப் பசியோடு உண்ண நேரிட்டாலும் படபடப்புடன், அதிவிரைவாய் உண்ணாமல் ஆற அமர இருந்து நன்றாய் மென்று உண்ணவேண்டும்.

"நொருங்கத் தின்றார்க்கு அகவை நூறென்ப" என்பது பழமொழி. காக்கையானது, வீட்டிலுள்ள பொருட்களைக் கவர்ந்து கள்ளமாய் உண்ணும்போது ஒரு சிறிதும் கரைவதில்லை. வீட்டிலுள்ளார் காக்கையைக் கூவி அழைத்து அதற்கென வைத்த உணவைக் கரையாது உண்பதுமில்லை.

களவெடுத்த பொருளைக் கள்ளமாய் உண்ணும் பழக்கம் காகத்துக்குண்டு. பார்த்தீர்களா...? காகமானது குயில் முட்டைகளையும் அடைகாக்கின்றது; குயில் குஞ்சுகளைக் கொத்தியும் கலைக்கின்றது.

அது சரி! பழஞ்சோறும், வற்றவைத்த பழங்கறியும் சாப்பிடும்போது ஏற்படும் நிறைவு எந்த 'பாஸ்ற் பூட்' (*Fast Food* – தமிழில் விரைவுணவென்றா சொல்வது...) சாப்பிடும்போதும் வருமா....?




# இலக்கியமஞ்சரி

□ ■ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறுங்கதை - 04

# விடலைத் தாபம்



"..... ம் ..... விடலையளுக்கு தெருவில மனிசர் வாறதும் தெரியிறதில்லை ... இதெல்லாம் எத்தினை நாளைக்கு...? எல்லாமே வயதுக் கோளாறுதான்"

அந்தத் தனியார் கல்வி நிலையத்திலிருந்து வாலிப கூட்டமொன்று சைக்கிள் சவாரியில் வந்துகொண்டிருந்தது. திரையரங்கில் முதல்நாள் பார்த்த சினிமா பற்றிய அலசலில் சிலரும், வரப்போகும் தேர்தலில் குதிக்கவிருக்கும் அரசியல்வாதிகள் பற்றிய எதிர்வுகூறலில் சிலருமாக, தமக்குப் பின்னால் யாரும் வரக்கூடுமென்ற சிரத்தை சிறிதுமின்றி சமாந்தரமாக வீதியை ஆக்கிரமித்தவாறு நகர்ந்துகொண்டிருந்த கும்பலின் கவனம் திடீரென திசைமாறியது.

தூரத்தே அன்னநடை பயின்றுவரும் யுவதிகளைப் பார்த்ததால் வந்த திருப்பம். இவர்களுக்குத் தாங்களும் சளைத்தவர்களல்லர் என்ற தோரணையில் அவர்களும் வீதியை அகலித்தவாறு, சிலர் சைக்கிள்களை உருட்டிக்கொண்டும் வந்தனர். சவாரியில் வருபவர்களுக்கு ஒதுங்கி சற்று வழிவிட்டு நகர்ந்தபோதும், அந்தக் கன்னியர் குழாம் தமக்கும் வீதியில் அரைப் பங்கிருப்பதாக, மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்டது; பின் பெரிதாக நகைத்தது.

அவர்கள் இவர்களையும், இவர்கள் அவர்களையும் கடந்து சில யார் தூரத்துக்குப் போயிருக்க மாட்டார்கள்: இங்கிருந்து ஒருவரும் அங்கிருந்து ஒருவருமாகத் திரும்பிப் பார்த்ததுதான் தாமதம், பெண்கள் பகுதியில் கலீரென்று சிரிப்பொலி எழுந்தது.

அந்தக் கலீரொலியால் கவரப்பட்ட சவாரிக்காரர் கவனம் பின்னோக்கித் திரும்பியபோது கண்ட காட்சியை அவராலேயே நம்பமுடியவில்லை. சாதுவாய்த் தன்னை இனங்காட்டிய ஒரு 'சலனம்' பின்னடித்தது புலப்பட்டது.

"இஞ்ச பாரடா மச்சான், இவருக்கும் மீசை அரும்பிட்டுது....!"

இதுவரை காணாத ஒன்றைத் தேடிக் கண்டு பிடித்ததுபோல் ஒருவன் உரக்கக் குரல் கொடுத்தான், அவர்களுக்குக் கேட்கும்படி.

"அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்: அதை ....."

எனத் தொடங்கி, சில நாழிகை கழித்து,

"...... அதை நாங்களும் ஆமோதிக்கிறோம்!"

என்று எதிர்பார்ப்பாளர் வசமிருந்து ஒரு குரல் எகிறியது. அதைத் தொடர்ந்து கலகலவென்ற சிரிப்பொலி எழுந்து காற்றில் கலந்தது.

பின்னால் வந்த வயோதிபம் ஒன்று,

"...... ம் ..... விடலையளுக்கு தெருவில மனிசர் வாறதும் தெரியிறதில்லை ..... இதெல்லாம் எத்தினை நாளைக்கு.....? எல்லாமே வயதுக் கோளாறுதான்" என்று, கூட வந்த சகாவுக்குச் சொல்லிக்கொண்டே அவர்களைக் கடந்து சென்றது. ■

- வீகேயெம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனித உரிமைகள் ஆண்டு

ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம்

**2014ஆம்** ஆண்டினை எமது மட்டக்களப்பு மறைமாவட்டம் மனித உரிமைகள் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது. இந்த ஆண்டிலே மனித உரிமைகள் தொடர்பாகச் சிந்திக்கவும் செயல்படவும் அது விழைகின்றது. முன்னெப் போதுமில்லா வகையில் மனித உரிமைகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய கால கட்டத்தில் கிறீஸ்தவர்களாகிய நாம் இது குறித்து மனதிற் கொண்டு சிந்தித்துச் செயலாற்ற அது அழைப்பு விடுக்கின்றது.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள், "மனித உரிமைகள் என்பது நாம் எல்லோருமாகப் பகிர்ந்து கொள்வதாகும். மனித மாண்பையும், விழுமியங்களையும் அங்கீகரிப்பது சம்பந்தமானது அது. மனித உரிமைகள் பற்றி அறிந்து கொள்ளும்போது நாம் மதிப்பு, நியாயம், நீதி, சமத்துவம் என்பவற்றையிட்டு அறிந்துகொள்ளுகின்றோம். மனித உரிமைகள் சுதந்திரத்தைச் சாத்தியமானதாக்குகின்றது" என்று மனித உரிமைகள் ஆண்டாக 2014ஐ அறிக்கையிடும் போது எடுத்துக்கூறியிருக்கின்றார்.

இன்று நாம் அதிகமாக மனித உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய கால கட்டத்தினூடாகக் கடந்து கொண்டிருக்கின்றோம் என்பது உண்மை! நம்மில் பலருக்கும் மனித உரிமைகள் என்கின்ற வார்த்தை நல்ல மனப்பாடமே தவிர அதன் உள்ளார்ந்த அர்த்தம் பற்றிய அறிவு எம்மிடம் போதுமான அளவில் இல்லை என்பதே யதார்த்தம்.



**மனித உரிமைகள் என்றால் என்ன?**

மனிதன் என்கின்ற அளவிலே அவனுக்குள்ள உரிமைகளை மனித உரிமைகள் என்ற சொல் குறித்து நிற்கின்றது. ஒரு தனி மனிதன் ஆணாக இருந்தாலென்ன, பெண்ணாக இருந்தாலென்ன, ஒரு குழந்தையாக இருந்தாலென்ன, அவன் பிறப்பினால் அவனுக்கு உரித்தான, அல்லது அனுமதிக்கப்பட்ட சுதந்திரங்கள் இவையாகும். பலரும் மனித உரிமைகள் என்றால் என்ன என்று கூறத் தலைப்படுவார்கள். தமது எண்ணங்களின் அடிப்படையில் வகைப்படுத்துவார்கள்; ஆனாலும் பெரும்பாலானோருக்கு உண்மையிலேயே தமக்குரிய உரிமைகள் பற்றி அதிகம் தெரிந்திருப்பதில்லை.

மனித உரிமைகள் தனிமனித மாண்பை - கௌரவத்தை - மதிப்பை அடிப்படையாகக் கொண்டவையாகும். மனிதன் பண்பாடு கொண்ட, நியாயங்களுக்குக் கட்டுப்பட்ட ஒருவன் என்கின்ற அடிப்படையில், அவன் மாண்புடன் நடத்தப் படுவதற்கு உரியவன் என்கின்ற கருதுகோளுடன் உருவானவைதான் மனித உரிமைகள். இவை நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், இடத்துக்கு இடம் மாறுபடும் ஒன்றல்ல. இது சர்வதேச ரீதியானது. சில இடங்களில் சில விசேடமான குழுக்கள் சில குறிப்பிட்ட உரிமைகளை அவர்களுக்கே உரியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


என்கின்ற வகையில் அனுபவிக்க முடியும். ஆனால் மனித உரிமைகள் என்று வரையறை செய்யப்படுபவை, அனைத்துப்பேருக்கும் உரிய தான — அவர் யார், எங்கு வாழ்கின்றார் என்பதை யெல்லாம் கடந்து, அவர் உயிர் வாழ்கின்றார் என்ற அடிப்படையில் கொண்டுள்ள உரிமைக ளாக அமைகின்றன.

மனித உரிமைகள் என்பது, மிகவும் அகலமான பரப்புக் கொண்டது. அவை தெரிவை யும், சந்தர்ப்பத்தையும் கருத்தாகக் கொண்ட வையாகும். பேச்சு உரிமை, மத நம்பிக்கை, தொழில் பெற்றுக்கொள்ளல், ஒரு தொழிற் துறையை உருவாக்கிக் கொள்ளுதல், தனக் குரிய இணையைத் தேடிக்கொள்வது, குழந்தை களைப் பெற்று வளர்ப்பது போன்றவற்றில் கொண்டி ருக்கும் சுதந்திரம் போன்றவற்றை இது கருத் தாய்க் கொண்டது. பரவலாக இடைஞ்சலின்றி பயணம்மேற்கொள்ளவும், தொல்லைகளில்லாமல், துஷ்ப்பிரயோகமின்றி, அச்சுறுத்தப்படாமல், வேலை யில் இடைநிறுத்தப்படாமல் பயனுள்ள வகையில் தொழில் செய்ய இருக்கும் உரிமை போன்றவற் றையும் அது உள்ளடக்கியுள்ளது. அதில் நல்ல பொழுதுபோக்கினை அனுபவிக்கவும் உள்ள உரிமைகள் கூட அடங்கியுள்ளன.

முன்னைய காலங்களில் மனித உரிமை கள் என்ற வார்த்தையே இருந்திருக்கவில்லை; அப்படி உரிமைகள் இருந்ததில்லை; அதையிட்டு யாரும் அலட்டிக் கொண்டதுமில்லை. பின்னரே மக்களுக்குக் குறித்த வகை சுதந்திரம் இருக்க வேண்டும் என்கின்ற கருத்து பிறப்பாக்கம் பெற்றது. குறிப்பாக இரண்டாவது உலக மகா யுத்தத்தை அடுத்தே மனிதனுக்கு உரித்தானவைகள் என்று முப்பது வகையான உரிமைகளை உறுதிப்படுத் தும் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்டது.

## மனித உரிமைகள் பற்றிய சுருக்க வரலாறு

### *சைரஸ் உருளி (கி.மு. 539)*



பேர்சியாவின் முதலாம் மன்னன் மாவீரன் சைரஸ், மனித உரிமைகள் மீது செய்த பிரகடனம் அக்காடிய மொழியில், சூளை யில் சுடப்பட்ட களி உருளியில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இவன் இந்த ஆண்டிலே பபிலோ னைச் சேர்ந்த அடிமைகளை விடுதலை செய் தான் என சரித்திரம் சான்று பகருகிறது. அவனது படைகள் பாபிலோனைக் கைப்பற்றிய பிறகு அவன் யாருமே எதிர்பார்த்திராத பெரும் பணி யொன்றை நிறைவேற்றினான். அவன் உடன டியாக பாபிலோன் கைதிகளை, அடிமைகளை விடுவித்ததோடு, இன சமத்துவத்தையும், தமக்குரிய சமயத்தைத் தாமே தெரிந்துகொள்ள மக்களுக்குள்ள உரிமையையும் உறுதிப்படுத்தி அறிக்கை வெளியிட்டான். இதுவே



மனித உரிமைகள் மீது செய்யப்பட்ட முதற் பிரகட னமாகக் கருதப்படுகிறது. இதில் நான்கு அம்சங் கள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தின் முதல் நான்கு சரத்துகளாக அமைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### *மனித உரிமைகளின் பரம்பல் :*

பாபிலோனிலிருந்து மனித உரிமைகள் சிந்தனை வேகமாக இந்தியாவுக்கும், கிரீசுக்கும் பின்னர் உரோமைக்கும் பரவியது. உரோமையில் மக்கள் தமக்குத் தாமே வகுத்துக் கொண்ட எழுதப்படாத ஒழுங்கு முறைகளுக்கேற்ப வாழ்ந் தமை கண்டு, உரேமைச் சட்டம் வரையப்பட்ட போது, அவையும் அடிப்படையான அம்சங்களாக உள்வாங்கிக் கொள்ளப்பட்டன.

### *1215ஆம் ஆண்டின் "மக்னா கார்ட்டா" (Magna Carta) அறிக்கை:*

இது, 1215 இல் இங்கிலாந்து மன்னன் கைச்சாத்திட்ட 'பெரும் பட்டயம்' என்பதாகும். இன்று ஆங்கில மொழி பேசும் உலகின் அரசியல் சட்டவாக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய சரித்திர பூர்வ பிரகடனம் இதுவென்று கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இங்கிலாந்து ஜோன் மன்னன் அதுவரை வழக்கி லிருந்த பல சட்டங்களை மீறும் வகையில் நடந்து கொண்டதைக் கண்டு வெகுண்ட மக்கள் அவனைக் கொண்டு செய்ய வைத்த பிரகடனம் தான் இந்த 'மக்னா கார்ட்டா' என்பது. இதில் பிற்காலத்தில் மனித உரிமைகள் என்று வரையறை செய்யப்பட்ட அம்சங்கள் உள்ளடங்கியிருந்தன. அரசாங்க ஆதிக்கம் இல்லாத திருச்சபை அமை தல் என்பதுவும், மக்கள் மேலதிக வரிச்சுமைக ளைக் கொண்டிராத வண்ணம் நிலபுலன் களை வாங்கவும், சொந்தமாக வைத்துக் கொள்ளவுமான உரிமம் என்பன இதில் குறிப்பிடப்பட்டவையாகும். அது மட்டுமில்லாமல் அதிலே, விதவைகள் பெரும் சொத்துகளைச் சொந்தமாகக் கொண்டிருந்தாலும், மறு மணம் செய்வது தொடர்பில் அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமையும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கின்ற சித்தாந்தமும் அடங்கியிருந்தது. இலஞ்சம் மற்றும் அதிகாரி களின் முறையற்ற நடத்தைகளுக்கெதிராகவும் நடவடிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டிருந் தன.

நவீன ஜனநாயகத்தின் முன்னேற் றத்திற்கு பங்களிப்புச் செய்த சட்டபூர்வமான சாசனம் என்று பரவலாக அறியப்பட்ட இதுவே சுதந்திரத்தை நிலைநாட்டும் போராட்டங்களில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது என்று கூற முடியும்.




~ தொடரும் ....


## திருஅவைச் செய்திகள்

பங்கு மக்கள் சமய வழிபாடுகளில் பெரும் எண் ணிக்கையில் பங்கேற்பதற்கும், பங்கு அருட்பணி யாளர் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பகத் தன்மைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்று இந்தியாவின் கோவாவில் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இந்தியா வில் திருப்பயணம் மேற்கொள்ள அழைக்க வேண்டும் என இந்திய ஆயர் பேரவை விடுத்த விண்ணப்பத்தை இந்தியப் பிரதமர் ஏற்றுள்ள தாக இந்திய ஆயர் பேரவை வெளியிட்ட செய்திக் குறிப்பு கூறுகிறது.



## எண்ணிப் பார்க்கையில் 05



மனிதனாகப் பிறந்தவன் தன் நெஞ்சில்
வாழ்வில் உயர்நிலையொன்று பற்றிய
கனவைச் சுமந்தவனாகவே இருப்பான்.
அதுகுறித்து ஆசை கொண்டு
அதற்காக உழைத்திருப்பான்;
இருப்பினும் சிலபேர்,மனதில்
வந்தோம் போனோம் என்கின்ற
சிந்தனையோடு வாழ்வதுமுண்டு
கனவோடு வாழ்பவனே உரிய தேடலை
வாழ்வில் கொண்டிருப்பான்.
நிதானமாக எண்ணிப்பார்க்கையில்.. . ..
வெற்றிக் கனவில் மிதப்பவர் தம்
வெற்றிக்காக ஆசைப்படுவதைவிடவும்
வெற்றிக்காக உழைக்கின்ற ஆசையே
முக்கியமானதென்ற உண்மை மனதுக்குப் புரியும்.
வெற்றிக்கான ஆசையல்ல வெற்றியை
- உயர்வைத் தருவது;
மாறாக இலக்கை நோக்கிய உழைப்பே
வெற்றியைக் கையில் கனியச் செய்யும்

● ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இஸ்ரயேல்

**இயேசுவின் காலத்தில் இவர்கள் நாடு** – யூதேயா, சமாரியா, கலிலேயா என்று அழைக்கப்பட்டது.

கி.பி. 132ல் ஏட்ரியன் என்ற உரோமைப் பேரரசன் இதனைப் புதிய நாடொன்றாக உருவாக்கி அதற்குப் பலஸ்தீனா என்று பெயரிட்டான்.

**எகிப்தில் அடிமை** ~ யாக்கோபுவும், அவர் தம் பிள்ளைகள் 69 பேரும், தீனா என்ற யாக்கோபுவின் மகளும் அவர் சந்ததியினர்களும் சுமார் 400 ஆண்டுகள் எகிப்தில் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

**தேசம்** ~ சுய ஆட்சியும் அவர்தம் அரசர்களும் தோன்றினர். இங்கு, தேசிய வாதமும், சமயவாதமும்


- **கி.மு. 574ல் நெபுக்கட்னேசர் கைப்பற்றுதல்** ~ இவன் பபிலோனியப் பேரரசன். ஜெருசலேம் தேவாலயத்தை அழித்தான். மக்கள் நாடு கடத்தப்படல் - இவ்வாலயம் சோலோ மன்னனால் பொன்னாலும், விலையுயர்ந்த கற்கலாலும் அலங்கரிங்கப்பட்டிருந்ததாலும் இக்கைப்பற்றுதலின் பின் இஸ்ராயேலர் பபிலோனியாவிலும் வேறு பல நாடுகளிலும் குடியேறினர். இவர்கள் இந்தியாவுக்கும் வந்திருக்கலாம்.

- கி.மு 37 - 04 வரை ஆட்சி செய்த மகா ஏரோது மன்னன் ஜெருசலேம் தேவாலயத்தை மீண்டும் பழையபடி கட்டினான். அத்தேவாலயம் யூதர்களின் சமய ஒற்றுமையின் இருப்பிடம்.

**இவர்களை ஆட்சிசெய்த ஏனையோர் :**

- கி.மு. 70-325 (கி.பி) உரோமர் ஆட்சி-








Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அடக்கு முறையுடன் ஓரளவு மதச் சுதந்திரம்.

கி.பி.325-614 பைசான்தைன் அல்லது கிறிஸ்தவப் பேரரசு.

| | |
|---|---|
| 614-634 | பேர்சியப் பேரரசு |
| 634-1072 | அராபியர் ஆட்சி |
| 1072-1099 | துருக்கியர் ஆட்சி |
| 1099-1291 | குருசேடர் - (Crusader) கால ஆட்சி |
| 1291-1517 | மெழுலேக்கியர் ஆட்சி |
| 1517-1917 | ஒட்டோமன் துருக்கியர் ஆட்சி |
| 1917-1948 | பிரித்தானியர் ஆட்சி |
| 1948 மே - 14 | சுதந்திரம் |
| 1967ற்கு முன் | ஈராக், ஜோர்தான், லெபனான், எகிப்து ஆகிய நாடுகள் இஸ்ராயேலைத் தாக்கின. |

1967ல் 6 நாள் யுத்தம் - இஸ்ராயேல் தாக்கப்பட்டது.

சொந்த இராச்சியத்தை இறைவன் தமக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக இஸ்ரயேலர் தம் குழந்தைகளையும் இறைவனுக்குப் பலி கொடுத்தனர். ஜேர்மனியைச் சார்ந்த தொண்டு அடிப்படையில் பணியாற்றும் பெண் 1948ற்கு முன்பு இஸ்ரவேல் முழுவதும் சுமார் 6000 குழந்தைகள் பலியிடப்பட்டதாகவும், 1945 அளவில் அது 8 ஆகக் குறைந்ததாகவும், அது இறைவனின் பராமரிக்கையேயாகும் என்று தென்னிந்திய கிறிஸ்தவச் சபையொன்று இயேசு பிறந்த நாட்டையும் ஜெருசலேத்தையும் படமாக்கியபொழுது சாட்சியமளிக்கிறார்.

தற்போது இஸ்ராயேல் பாராளுமன்றத்தில் 120 பிரதிநிதிகள் உள்ளனர். இஸ்ரயேலில் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் 4 ஆண்டு கட்டாய இராணுவப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

இன்று முக்கிய வீதிகளிலெல்லாம் ஆண், பெண் இராணுவத்தினர் பலர் சதா கண்காணிக்கின்றனர்.

ஆர்மெகடன் என்பது அவர்களது யுத்தக்களம். இங்குதான் இயேசு வருவார். வந்து தம் எதிகளைச் சந்திப்பார் என்ற ஐதீகம் யூதர்களிடம் உண்டு.

ஜெருசலேம் தேவாலயத்திற்குள்ளும் வருவார். அதுவும் கிழக்குப் புறமாய் அமைந்துள்ள 8 நுழைவாயில்களில் ஒன்றான பொன் கதவைக் கொண்ட நுழைவாயில்களினூடாக வருவார். இதனால் மற்றவர்கள் அவ்வழியைப் பயன்படுத்தாதவாறு இஸ்ரயேல் அதனை அடைத்து வைத்திருக்கிறார்கள்.

முதலாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லர் சுமார் 1 1/2 கோடி யூதர்களைக் கொன்றான்.

ஒரேநாளில் 1945ல் சுமார் 7000 யூதர்கள் நச்சுவாயுக் கிடங்கில் (Gas Chamber) கொல்லப்பட்டனர்.

யூதர்கள் குழந்தைகள் உட்பட ஏராளமானோர் நாடுகடத்தப்பட்டனர் - உலகெங்கும் சிதறி வாழ்கின்றனர். இவ்வாறு யூதர்களைக் குறித்த தீர்க்க தரிசனம் நிறைவேறியுள்ளது.

இவர்களது வாழ்வு இவ்வாறு மிகவும் துன்பமானதும், சவாலானதுமாகும்.

பலர் இன்று தம் தாய்நாடு திரும்புகின்றார்கள். ஒவ்வொரு இஸ்ராயேலரது வருட வருமானம் 8, 50 000 இந்திய ரூபாய்களாகும். அல்லது US $ 69,000 ஆகும். மிக நவீன இராணுவ உபகரணங்கள், நவீன டாங்கிகள் இஸ்ர யேலரிடம் உண்டு.

விசுவாசக் கண்ணோட்டத்தில் - திருவிவிலியப் பின்னணியில் தீர்க்கதரிசிகளையும், இறைமகன் இயேசுவையும் கொலைசெய்த சாபத்துக்கு யூதர்கள் உள்ளாகியுள்ளனர்.


இது விசுவாசமாகும். ●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்டு கௌரவம்





- வயலட் சரோஜா -

வறட்டுக் கௌரவம் என்று கூறும்போது, "தன்னைப் பற்றி சமூகம் உயர்வாக எடை போட்டு புகழ வேண்டும் என்ற எதிர்பார்க்கையில் நடத்தை களும், பேச்சுகளும் போலியாக அமைவதைக் கூறலாம்.

உளவியலாளர் 'அல்பிறட் மாசவின்' கூற்றுப்படி 'கணிப்பீட்டுத் தேவை' சிறுவர் முதல் முதியோர் வரை தேவைப்படுகின்றது. சிறுவர்கள், தம்மை அனைவரும் வாழ்த்த வேண்டும் என்பதற்காக தமது திறமைகளை முடிந்தவரை வெளியிற் கொண்டுவந்து, பிறர்முன் காட்டி மகிழ்கிறார்கள். 'கெட்டிக்காரன் ..... வீரன் .... நல்லவன் ..... கௌரவமானவன்' என்றெல்லாம் புகழப்படவே விரும்பு கிறான். அதேபோன்று, பெரியோர்களும், தம்மை ஏனை யோர் கௌரவப்படுத்துவதையே விரும்புகிறார்கள். புகழை உரிய முறையில் முயற்சிசெய்து, அடைந்து கொள்வது ஆரோக்கியமானது. அதனாற்றான் திருவள்ளுவர்,

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்கிறார் போலும்.

ஒருவன் பூவுலகில் பிறந்தால் அவன் புகழுடன் சாதனை படைக்க வேண்டுமாம். அல்லாதவிடத்து, அவன் பிறவாமல் இருப்பது நல்லதாம் என்பது இதன் பொருள். வந்த புகழ் ஒருநாளும் எம்மை விட்டுப் போகாது. அதையே, "கெட்டாலும் செட்டி செட்டிதான், கிழிந்தாலும் பட்டு பட்டுதான்" என்பார்கள். ஆனால், பிறர் கவனத்தை தன்பால் ஈர்த்து, தன்னைப் பெரியதொரு ஆளாகக் காட்ட முயற்சிப்பது 'வறட்டுக் கௌரவம்'தான்.

ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்துதல், ஆடம்பரமான உணவருந்துதல், ஆரோக்கியத்திற்கு முதலிடம் கொடுப்பதில்லை. "சொசேஜஸ், சோஸ், சிப்ஸ், சிக்கன் போன்ற உணவு வகைகளைத்தான் உண்ணு கிறோம்" என்பதைப் பெருமையாகப் பேசி மகிழ்தல். "என்ர மகன் சொசேஜ் இல்லாமல் சாப்பிடமாட்டான்" இதில் ஒரு வறட்டுக் கௌரவம்... "என்ர மகன் இன்ரநஷனல் ஸ்கூலிலதான் படிக்கிறான்..." இப்படிக் கூறுவதில் பெரும் திருப்தி.

சில பிள்ளைகள் தமது தாய் தந்தையரை - எடுப்பாக, கௌரவமாகக் கற்பனை செய்துவிட்டு நிஜமாக வுள்ள பெற்றோரை ஏற்க மனமின்றி அவர்களைப் பெற்றோர் கள் என்று அறிமுகப்படுத்தவே வெட்கப்படுகிறார்கள். அது அவர்களது வறட்டுக் கௌரவம்.

சிலர், "எங்கள் வீட்டில் *T.V.* உண்டு, குளிர் சாதனப் பெட்டி உண்டு, கணினி உண்டு, வோஷிங் மெசின் உண்டு, காருண்டு, வானுண்டு ....." என்று தமது கௌர வத்தை வறட்டுத் தனமாகப் பேசுவார்கள். சில சமயங்க ளில் உண்மைக்குப் புறம்பாகவும் புழுகி முழங்குவதில் ஓர் இன்பம் அவர்களுக்கு.

சில சமயங்களில், "எங்கட மாமா டொக்டர், பொலிஸ் இன்ஸ்பெக்டர்" என்று பெருமை பேசுவது, தான் அந்தஸ்தில் உயர்ந்தவனென்று சொல்லாமற் சொல்வது,

தம்மைப் பற்றி நேரடியாக அறிமுகப்படுத்தமாட் டார்கள். யாராவது உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவரைக் கூறி, அவரது உறவு முறை அல்லது நட்பு முறையைக் கூறித்தான் தம்மை அறிமுகப்படுத்துகிறார்கள். இதுவும் வறட்டுக் கௌரவத்தின்பாற்பட்டதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொதுவாக, பொருளாதாரக் கஷ்டங்களை இவர்கள் ஏற்பதில்லை. உயர் தொழில் செய்வதையே இவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். கற்றவர்கள், உயர் தொழில் பார்ப்போர்கள் போன்று, தாமும் ஆடை அணிதல், அவர்களைப் போன்று தாமும் நடந்து கொள்ள முற்படல், தாமும் உயர் அந்தஸ்தில் உள்ளவர்கள் போன்று வறட்டுத்தனமாகப் பாசாங்கு செய்வதன் மூலமாக மகிழ்ச்சி காண்பார்கள்.

வறட்டு கௌரவத்தை விட உண்மையான கௌரவத்தைத் தேடிக்கொள்வது மேல். அவ்வாறு சமூகத்தில் உயர்வான அந்தஸ்தைப் பெற வேண்டுமானால், பல்வேறுபட்ட உணர்வுகளைத் தியாகம் செய்து கல்வி மூலம், உழைப்பு மூலம் உயர்நிலையை அடைந்து, பேரோடும், புகழோடும் வாழ்வது; ஆரோக்கியமானது, நிரந்தரமானதும் கூட.

எந்தவொரு அறிஞரும், மேதையும், தொழில் அதிபரும், சாதனையாளனும், கண்டுபிடிப்பாளனும் வறுமையில், சிறுமையில் இருந்துதான் படிப்படியாக முன்னேறி, சாதனை படைத்து, சரித்திரத்தில் தமது பெயரைப் பொன் எழுத்துகளாற் பொறித்து விட்டார்கள். உலக மாவீரன் நெப்போலியன் போணபாட் சாதாரண செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன்தான். ஆனாலும் விடாமுயற்சியாலும், உறுதியான மனந்தளரா இலட்சியத்தாலும் சாதனை படைத்தவர். தங்கப் பீங்கானிற் சாப்பிடும் அளவிற்கு சாதனை படைத்தவர். நேரத்தைப் பொன்னாக மதித்துச் செயற்பட்டவர். சிறந்த முகாமைத்துவம், திட்டமிடலில் சாதுர்யம், சுறுசுறுப்பு, கடமை தவறாமை, தன் நம்பிக்கை இவற்றால் பல வெற்றிகளைப் பெற்றவர். இன்று, நெப்போலியனுக்கு பிரான்ஸ் நாட்டில் அவரது கல்லறைக்கு விடி விளக்கேற்றப் படுகிறது. அவர் "இம்பீரியல்" என்ற பல்கலைக்கழகத்தையும் நிறுவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





இவ்வாறாக முயன்று விடாமுயற்சியால் தேடும் கௌரவம், காலத்தாற் கரையாது, நீடித்து நின்று நிலைக்கிறது.



அடுத்து, ஆபிரகாம் லிங்கன் 1865களில் அமெரிக்க ஜனாதிபதியாகச் சாதனை படைத்தவர். 1862ல் நீக்கிரோ மக்களை அடிமைகளாகச் சந்தையில் விற்றார்களாம். அந்தக் கொடுமையை இல்லாதொழித்த பெருமை இவரையே சாரும். இவர், சாதாரண விவசாயியின் மகன்தான். இரவற் புத்தகங்களை வாங்கித் தெருவோர விளக்கிற் படித்துச் சாதனை படைத்தவர். 1865 ஏப்ரல் 14ல் நாடகம் பார்த்துக்கொண்டிருந்த ஆபிரகாம் லிங்கனை "யோன் வில்க்ஸ் யூத்" *(John Wilkes Booth)* என்ற நடிகன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். அவரது பூத உடல் அழிந்தாலும் புகழுடல் அழியவில்லை. இது ஆரோக்கியமான கௌரவமே!

சந்திரனில் முதல் முதல் காலடி பதித்த அமெரிக்கர்களான நீல் ஆம்ஸ்ராங் *(Neil Armstong)*, எட்வின் ஆல்டரின் *(Edwin Aldrin)*, மைக்கல் கொலின் *(Michael Colline)*, அப்பல்லோ II என்ற விண்கலத்திற் சென்று 1969 ஜூலை மாதம் 16ம் திகதி சாதனை படைத்தார்கள். இவர்களும் சாதாரண மனிதர்கள்தான். துணிவும் விடாமுயற்சியும் இவர்களை முடி சூடா மன்னர்களாக்கி விட்டன.

வில்லியம் ஷேக்ஸ்பியர் *(William Shakes peare)* 1564 –1616 வரை வாழ்ந்து சாதனை படைத்த, உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர். இன்று வரை இவரை உலகம் மறக்கவில்லை. இனியும் மறக்கப் போவதுமில்லை. இவரது தந்தை யோன் சேக்ஸ்பியர் கையுறை தயாரிக்கும் சாதாரண வணிகர்தான். இவர் நாடக அரங்கில் திரைச் சீலையை அகற்றுபவராக வேலை செய்தாராம்.



எழுந்து செயற்படுங்கள்... புத்துணர்வுடனும் புரிந்துணர்வுடனும் புறப்படுங்கள்... வெற்றிக் கனிகளை நிச்சயம் பறிப்பீர்கள். எந்தச் சோதனை வந்த போதும் உறுதியாக இருங்கள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






**வைகாசி 02ம் திகதி : புனித அத்தனாசியஸ்**

இவர் "விசுவாசத்தின் மாபெரும் வீரன் என அழைக்கப்படுபவர். அலெக்சாந்திரியாவில் 296ம் வருடத்தில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் அவதரித்தார். அலெக்சாண்டரின் மேற்பார்வையில் கல்வி கற்றார். 313ம் வருடத்தில் பட்ரியார்ச்சல் கடலிலுள்ள அச்சில்லாசை அலெக்சாண்டர் வென்ற இரு வருடங்களின் பின் அத்தனாசியஸ் புனித அந்தோனியாருடன் பாலைவனம் சென்று தியானத்தை மேற்கொண்டார். 319ம் வருடம் தியாக்கோனானதும் ஏரியசின் வளர்ச்சிக்கெதிராகச் செயற்படத் திருச்சபை இவரை அழைத்தது. இந்த ஏரியஸ் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த ஒரு குருவாகும். கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மைக்கெதிராகப் பிரச்சாரம் செய்தவர். இது அத்தனாசியசுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. பின் இவர் தன் சொந்த ஊரிலேயே ஆயரானார். கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவராயிருந்தார். 325ம் வருடத்தில் நிக்கியா திருச்சபையின் ஆயருக்கு உதவியாக இருந்தார். 5 மாதங்களின் பின் அலெக்சாண்டர் மறைந்தார். மரணப் படுக்கையில் அத்தனாசியசைத் தன் வெற்றியாளராகப் பரிந்துரை செய்தார். 326ம் ஆண்டு தலைவராகத் தெரிவுசெய்யவும்பட்டார். பின் ஏரியசைச் சார்ந்தோரால் பல சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார். ஒழுக்கம் நிறைந்த அதேவேளை துன்பங்கள் நிறைந்ததுமான வாழ்வின் பின் இந்த அஞ்சா நெஞ்சம் கொண்ட கத்தோலிக்க விசுவாசத்தின் வெற்றிவீரன், மாபெரும் மனிதன் 373ம் வருடம் வைகாசித் திங்கள் 2ம் நாளிலே அமைதியாக உயிர்நீத்தார்.

**வைகாசி 30ம் திகதி : புனித ஜோன் ஒப் ஆர்க்** (ST. JOHN OF ARC)



**1412ம்** ஆண்டு தை மாதம் 6ம் நன்னாளிலே பிரான்சிய நாட்டு லொரேன் மாகாணத்துக்கருகில் அமைந்த டோம் ரெமியிலுள்ள ஒரு குக் கிராமத்தில் விவசாயக் குடும்மொன்றில் பிறந்தார். சின்னஞ் சிறு வயதிலிருந்தே புனித மிக்கேல், புனித கர்த்தரின், புனித மார்கிரட் ஆகியோருடனும் வேறு சம்மனசுகளுடனும் தெய்வீக உறவைக் கொண்டிருந்தார். அதாவது, இவர்களுடன் உரையாடு மளவுக்கு இந்த உறவு இருந்தது. விசேடமாக, புனித மிக்கேல் சம்மனசானவரைக் குறிப்பிடலாம். பண்ணையில் வேலை செய்த சகோதரர்களுக்கு உதவுவதுடன் அருகிலிருந்த ஆலயத்திற்கு அடிக்கடி சென்று இயேசுவை நோக்கிச் செபிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். தான் அடிக்கடி உட்கொள்ளும் திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசுவிடம் அளவுகடந்த அன்பைக் கொண்டிருந்தார். பதினேழாவது வயதில் பிரான்சின் எதிரிகளை நாட்டைவிட்டுத் துரத்துமாறு கூறப்பட்ட கடவுளின் குரலைக் கேட்டு 1428ம் வருடத்தின் வைகாசி மாதம் அரசனிடம் சென்றார். அரச படைகள் ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்டிருந்தன. ஒரு சிறு படையைத் தன்னுடன் அனுப்புமாறு அவரிடம் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அரசனும் அவளை இறைவனே பிரான்ஸ் நாட்டைக் காக்க அனுப்பியதாக நம்பினார். தைரியம் நிறைந்த வீரர் கொண்ட ஒரு சிறு படையைக் கொடுத்தார். படைவீரர் அணிவகுத்துச் செல்ல, முன்னால் "இயேசு, மேரி" என எழுதப்பட்ட பதாதையைத் தூக்கியவாறு 'ஜோன்' சென்றார். போர் வீரர்கள் தைரியம் மிகுந்தவர்களாய்ப் போரிட்டுப் பிரித்தானியப் படையைத் தோற்கடித்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். பின் நாட்டை அபகரிக்க முயன்ற பேர்கண்டி எனும் பிரபுவையும் தோற்கடித்தார். அத்தோடு அரசவை உறுப்பினரதும், திருச்சபையின் எதிர்ப்பையும் கூட முறியடித்தார். 1429ல் வைகாசித் திங்கள் 08ம் நாளன்று ஓர்லியன்சையும் வென்றார். அரச படையின் ஒவ்வொரு வெற்றியையும் இரசித்தார். பின் 7ம் சார்ள்ஸ் பிரான்சிய மன்னனாக முடிசூட்டப்பட்டார். 1430ல் வைகாசித் திங்களில் முதலுதவிப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது பேர் கண்டியனின் ஆட்களால் கைது செய்யப்பட்டு இங்கிலாந்துக்கு விற்கப்பட்டு, அங்கு கொண்டுசெல்லப்பட்டு 09 மாதங்களாகச் சங்கிலிகளால் கட்டப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். அவரைக் குற்றவாளியாக்கினர். ஒரு சமய விரோதியாக, ஒரு சூனியக்காரியாக, விபச்சாரியாகக் குற்றஞ்சாட்டிப் பொதுமக்கள் நிறைந்த ரௌவென் எனும் இடத்தின் சந்தைக்குக் கொண்டுசெல்லப் பட்டுத் தீயிலிட்டு எரிக்கப்பட்டார். இச் சித்திரவதையின்போது இயேசுவின் பாடுபட்ட திருச்சிலுவையையே இவரது கண்கள் உற்றுநோக்கியபடி இருந்தன. "இயேசுவே, இயேசுவே" எனத் தீச்சுவாலைகளின் மத்தியில் குரலெழுப்பியவாறு 1431ம் வருடம் வைகாசி மாதம் 30ம் நாளன்று மரணத்தைத் தழுவினார் இவ் வீரமங்கை. இறக்கும்போது இவருக்குப் பத்தொன்பது வயது. 30 வருடங்களின் பின் இவரது புனிதத் தன்மை வெளிப்படுத்தப்பட்டு ஏற்கப்பட்டாலும், 1920ம் ஆண்டு புனிதையாகப் பிரகடனப்படுத்தப்பட்டு உலகுக்கு அடையாளம் காட்டப்பட்டார்.

## கடுகுக் கதை - 56

# மே தின உரிமை

அன்ரன் மே தின விடுமுறையில் வீட்டில் நின்றிருந்தார். அவரின் சின்ன மகன் அவரை கேள்விக் கணைகளால் துளைத்துக்கொண்டிருந்தான்.

"மே தினம் எண்டா என்னப்பா....?"

"தொழிலாளர்களுக்கு உரிமை கிடைச்ச நாள் தம்பி...."

"உரிமையெண்டா..."

விடை சொல்லாட்டி விடமாட்டான் என்று தெரியும்.

"அந்தக் காலத்துல ஆம்புள, பொம்புள, சின்னப்பிள்ளைகள் என்ற வேறுபாடு இல்லாம எல்லாரும் 12, 14 மணித்தியாலங்கள் தொழிற்சாலைகளில வேலை செய்ய வேண்டிக் கிடந்தது. இத எதிர்த்து தொழிலாளர்கள் எல்லாரும் போராட்டம் நடத்தி உரிமைகள வென்றெடுத்தாங்க; சிலர் இதில் குண்டடி பட்டு செத்தும் போனாங்க......."

"அப்பேய்! இந்த போராட்டம் கோட்டை ஸ்ரேசனுக்கு எதிரயா நடந்தது.....?"

"இல்லடா மவனே! அமெரிக்காவில ....."

"அதனாலதான் மே முதலாம் திகதி லீவு நாள், என்ன அப்பா...."

உரையாடலைக் கேட்டவாறே குசினிக்குள்ள சமையல் வேல செய்துகொண்டிருந்த அன்ரனின் மனைவியின் சத்தம் மட்டும் கேட்டது....

"எல்லாருக்கும் உரிமையும், லீவும் இருக்கு; இந்த அம்மாவுக்குத்தான் வருசம் 365 நாளும் 24 மணிநேரமும் லீவில்லாத வேல ...."

அன்ரனும், மகனும் மௌனமானார்கள்.

■ ■ ■



- பற்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜூபிலி நாயகியே வாழ்க!



சான்றோர்கள் உதித்தநல் சாவகச்சேரி தனில்
சத்தியத்தின் காவல் செய் தூய லிகோரி பங்கு மண்ணில்
ஆன்றோர்கள் இம்மனுவேல் அன்னம்மா தம்பதிகள்
நனிமகிழ்ந்து பெற்றெடுத்த நவமகள் அருள்மரியா வாழி

அன்பொடு பண்பும் அறிவாற்றல் பலவும் பெற்றுயர்ந்தே
ஆண்டவரின் அழகுமிகு கார்மேல் மடச்சோலை தனில்
ஆசிரிய சேவையுடன் அருட்பணி வாழ்வும் ஒன்றிடவே
அகவை ஈர்பத்துடன் ஐந்து நண்ணும் பேறுபெற்றீரே வாழி!

துள்ளித் திரியும் பள்ளிப் பருவமதில் அறிவை
அள்ளிப் பருகி அக்களித்தீர் றிபேக் கல்லூரி தனில்
பொருள் தேடும் இவ்வுலகில் அருள் தேடும் வாழ்வைத் தேர்ந்து
வாஞ்சையோடு இணைந்தீர் அச்சுவேலி திரேசா அகம் தனில்

கருவிலே உமைச் சுமந்த தாயின் கனவை நனவாக்கிடவே
கருத்தூன்றிக் கற்றலொடு நற்பயிற்சிபெற்றீர் பணிவாழ்விற்கு
கார்மேல் சபைச் சோலையில் முகிழ்த்த நல்மலராக
அருட்சோதரியானீரே! ஆயிரத்துத் தொள்ளாயிரத்தெண்பத்தெட்டில்!

அறியாமை இருளகற்றும் ஆசிரியப் பணியதனை
ஆர்வத்துடன் ஏற்றிருந்தீர் தொண்ணூற்று இரண்டதனில்
திருமறை செப்பியநல் புளிக்காரம் போல - செயற்பட்டு நின்றீர்
திருமலை தூய மரியாள் கல்லூரி தனில்

இறை ஒருவரே போதுமானவர் என்ற மறைவாக்கேற்று
உறுதியொடு உழைத்தீர் தேற்றாப்பளை கொல்பிட்டி சாலைகளில்
மருத்துவர் நோயுற்றவருக்கே உருத்தென்றெண்ணி
மஹவத்தை தூய அந்தோனியார்பதி கால்பதித்தீரே வாழி!

அறிவுப்பசி தீர்க்கும் அதிபராய் வருகை தந்தேயாங்கு
வறிய சிறார்களின் வயிற்றுப்பசி தீர்க்கும் அன்னையுமாய்
அல்லலுறும் பெற்றோருக்கும் அகல் வழிகாட்டியங்கு
அல்லும் பகலும் அயராது பணியாற்றுகின்றீரே வாழி!

தள்ளாடும் கட்டிடத்தை தகர்த்தெறிந்து - குறைதீர்க்க
நல்லோர்கள் உதவியுடன் மும் மாடிக்கும் வித்திட்டீரே
கள்ளமின்றிச் சிறார்கள் நிதம் களிப்புடனே கற்று ஏகும்
கண்கவர் கலைக்கூடமாக்கி வருகின்றீரே வாழி!

வெள்ளிவிழாக் கண்டிடவே நின்வழிபெற்ற நற்சேவைகள்
உள்ளமெல்லாம் உவகையுடன் உயர்ந்திடவே
பொன்விழாவும் புனிதமகள் நீர் பெற்று பார் சிறந்திடவே
பரமன் பதம் நிதம் பணிந்தே வாழ்த்துகின்றோம்!

**ஆக்கியோன் : செல்வி. டி.ஜ. ஜோசவ்**

**வாழிய வாழிய வாழியவே!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.05.2014

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் – 131

**யோசுவா : 8ம் அதிகாரம் 1–35 திருவசனங்கள்**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

யோசுவா ஆயியை அழித்தார். எரிக்கோவிற்கும் மன்னனுக்கும் செய்ததுபோல, ஆயிக்கும் மன்னனுக்கும் செய்தார். கிபயோன் மக்கள் இஸ்ரயேலருடன் சமாதானம் செய்து அவர்களிடையே வாழ்கிறார் போன்ற செய்திகளை எருசலேம் மன்னன் ...................... கேள்விப்பட்டான். அச்சமுற்றான். ஏனெனில், வலிமைமிக்க, மக்களுள்ள கிபயோன் சமாதானம் செய்துகொண்டது. எபிரோன் மன்னன் ஓகாம், யார்முத்து மன்னன் தெபீர் ஆகியோருக்கு "எனக்கு உதவிசெய்ய வாருங்கள், கிபயோனைத் தாக்குவோம். ஏனெனில், அது இஸ்ரயேலுடன் சமாதானம் செய்துள்ளது" எனச் சொல்லியனுப்பினான். எனவே, ...................... மன்னரும் கூடிப் படைகளுடன் சென்று கிபயோன் மீது போர் தொடுத்தனர். கிபயோன் மக்கள் யோசுவாவிடம், "எம்மைக் கைவிடாதீர். எமைக் காப்பாற்றும்" எனச் செய்தியனுப்பவே, கில்காலிலிருந்து யோசுவா தம் போர் வீரருடன் சென்றார். ஆண்டவர் யோசுவாவிடம், "அவர்கள் முன் ...................... . ஏனெனில் அவர்களை உன் கையில் ஒப்படைத்துள்ளேன் என்றார். அவர்களைத் துரத்தித் தாக்கவே, அவர்கள் பெத்கோரோனுக்குத் தப்பி ஓடுகையில் ஆண்டவர் அவர்கள் மீது அசேக்கா வரை பெரும் கற்களை வானத்திலிருந்து பொழிந்தார். இஸ்ரயேலரின் வாளால் கொல்லப்பட்டவர்களைவிட, இறந்தவர்கள் அதிகம். ஆண்டவர் இஸ்ரயேலுக்காகப் போரிட்ட அந்நாளைப் போன்று, அதற்கு முன்னும், பின்னும் இருந்ததில்லை. இஸ்ரயேலர் கில்காலிலிருந்த பாளையத்துக்குத் திரும்பினர். அந்த ஐந்து மன்னர்களும் தப்பியோடி, மக்கேதாவில் ஒரு குகையில் ஒளிந்தனர். இது யோசுவாவுக்கு அறிவிக்கப்பட்டது. "குகையின் வாசலில் ...................... வையுங்கள். காவலுக்கு ஆட்களை நிறுத்துங்கள். நீங்கள் பகைவரைத் துரத்துங்கள். தம் நகருக்குள் செல்லவிடாதீர்கள். கடவுள் அவர்களை உங்கள் கைகளில் ஒப்படைத்துள்ளார்" என்றார். அவ்வாறே அனைவரும் செயற்பட்டனர். பின் யோசுவா, "குகையின் வாயிலைத் திறந்து ஐந்து மன்னர்களையும் என்னிடம் கொண்டுவாருங்கள்" என்றார். அவர்களை அழைத்து வந்தபோது, ...................... அனைவரையும் அழைத்து, போர்த் தலைவர்களிடம் "அருகில் சென்று உங்கள் பாதங்களை இம்மன்னர்களின் கழுத்தில் வையுங்கள்" என்றார். அவர்கள் அவ்வாறே செய்தனர். அதன்பின் யோசுவா அவர்களை வாளால் வெட்டிக் கொன்றார். ஐந்து மரங்களில் சடலங்களை மாலைவரை தொங்கவிட்டு, கதிரவன் மறையும் நேரத்தில் ...................... கட்டளையிட்டார். அவற்றை அவர்கள் ஒளிந்திருந்த குகைக்குள் எறிந்தனர். குகையின் வாயிலில் பெருங்கற்களை வைத்தார்கள். யோசுவா அன்று மக்கேதாவைக் கைப்பற்றி, மன்னனையும் கொன்றார். ஒருவரையும் தப்பவிடவில்லை. இஸ்ரயேலர் யோசுவாவுடன் லிப்னா சென்று போர் தொடுத்தனர். ...................... லிப்னா மக்களையும் மன்னனையும் இஸ்ரயேலரிடம் ஒப்படைத்தார். அங்கேயும் வெற்றிபெற்றனர். யோசுவா இலாக்கிசையும் வென்றார். பின் எக்லோனுக்குச் சென்று தாக்கினர். அதனையும் அழித்தனர். பின் எக்லோனிலிருந்து எபிரோன் சென்று அதைத் தாக்கி அதனையும் அழித்தனர். அதேபோன்றே ...................... திரும்பி அதைத் தாக்கி அழித்தனர். பின் யோசுவா எல்லா மலைநாட்டையும் நெகேபு சமவெளியையும், பள்ளத்தாக்கையும் மன்னர்களையும் கைப்பற்றி ஆண்டவர் கட்டளையிட்டதுபோல் அவர்களை அழித்தார். ...................... பர்னேயாவிலிருந்து காசா வரை தோற்கடித்தார். எல்லா நாடுகளையும் ஒரே படையெடுப்பில் கைப்பற்றினார். ஏனெனில், இஸ்ரயேலின் கடவுள் அவர்களுக்காகப் போரிட்டார். யோசுவாவும், இஸ்ரயேலரும் கில்காலில் இருந்த பாளையத்துக்குத் திரும்பினர்.

| | |
|---|---|
| **விடைகள்:** | **கல்மழையால், பெருங்கற்களை, மக்களை, இறக்கிவிடுமாறு, ஆண்டவர், காதேசு, தெபீருக்கு, அஞ்சாதே, ஐந்து, அதோனிசெருக்கு** |

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 131

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. இலங்கையின் முதலாவது ஆளுநர்
(பிறெட்றிக் நோர்த் - கே.தோமஸ் மெயிற்லன்ட் - றொபட் பிறவுன்றிக்)

2. திருத்தந்தையால் அறிவிக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது கருதினால் இவர், பேராயர்கள் ....
(மார்க்கஸ் பெர்னான்டோ - ஒஸ்வோல்ட் தோமிஸ் - மல்கம் இரஞ்சித்)

3. தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல்
(மோகனாங்கி - பொன்னியின் செல்வன் - கடல்புறா)

4. முதல் கணக்கு இயந்திரத்தை உருவாக்கியவர்
(அபாக்கஸ் - ஐன்ஸ்டீன் - சாள்ஸ் பாபேஜ்)

5. உலகின் முதல் அகராதி தோன்றிய மொழி
(ஆங்கிலம் - கிரேக்கம் - சீனம்)

6. 'தொடங்கற்க' எனுஞ் சொல்
(வியங்கோள் வினைமுற்று - ஏவல் வினைமுற்று - முன்னிலைப் பன்மை வினைமுற்று)

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 131
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 129 விடைகள்

ஆயிக்கும், நகருக்கு, பெத்தேலுக்கும், அரபாவுக்கு, யோசுவா, இஸ்ரயேலர், ஈட்டியுடன், கதிரவன், பலிகளையும், கெரிசிம்மலை

## அறிவை வளர்ப்போம் - 129 விடைகள்

1. உ.வே. சாமிநாதய்யர்
2. புரந்தரதாசர்
3. 960 கி.மீ
4. இலங்கைத் தொழிலாளர் கட்சி
5. இறக்கமும் உண்டு
6. பெயரெச்சம்

## பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எவருமே எழுதாததால் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோருள் தெரிவான நால்வருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசுத் தொகை 200/=

- யே. மரிய நிதர்ஷனா
  இலங்கை மாதா ஆலய வீதி,
  1ம் குறுக்கு,
  இலங்காபுரம், தன்னாமுனை.
- க. அபிநயா
  8ம் குறுக்கு,
  திராய்மடு,
  மட்டக்களப்பு.
- C.N. கஸ்ரன் தோமஸ்
  செங்குந்தர் வீதி,
  ஆரையம்பதி.
- ம. சசீந்திதா
  38/10$^{C}$, 5ம் குறுக்கு,
  புதூர் நகர்,
  மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 76 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  மெக்கன் லீ பீற்றர்ஸ்,
  இல. 10, கமிலஸ் வீதி,
  டச்பார், மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  யேசுதாசன் ஜெயவாணி
  இரட்சகர்புரம்,
  மெதடிஸ்த வீட்டுத் திட்டம்,
  கோளாவில் - 01,
  அக்கரைப்பற்று.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  P. அனஸ்ரிக்கா
  16/16, பெயிலி குறுக்கு வீதி,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனித உரிமைகள் ஆண்டை முன்னிட்டு

## மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையம்

நடத்தும்

# குறுந்திரைப்படப் போட்டி




- போட்டியாளர்கள் பாடசாலை ரீதியாகவும் (அதிபரின் உறுதிப்படுத்தலுடன்), பங்கு ரீதியாகவும் (பங்குத் தந்தையின் உறுதிப்படுத்தலுடன்) போட்டியில் கலந்து கொள்ளலாம்.

- மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு படத்தின் கருப்பொருளாக இருக்கவேண்டும்.

- படத்தின் கால அளவு 10.00 நிமிடங்களுக்கு மேற்படாது இருத்தல் அவசியம்.

- குறும்படத்தின் C.D. பிரதி கிடைக்கவேண்டிய இறுதிநாள் 30 ஜூன் 2014.

- நடுவர்களால் தெரிவுசெய்யப்படும் மூன்று படங்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும் உலகத் தொடர்பு தின விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

1ம் பரிசு – 7000/=
2ம் பரிசு – 5000/=
3ம் பரிசு – 3000/=

தொடர்புகளுக்கு : இயக்குனர்
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.
தொ.பே.: 065 2226486

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media